
BALU BROS

# தூது சென்ற தூயர்

ஆசிரியர்:
வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார்
தமிழ்த் துறைத் தலைவர்
புதுக் கல்லூரி சென்னை-14.

வெளியிட்டவர்:
சி. சுப்பைய செட்டி & கம்பெனி
பப்ளிஷர் திருவல்லிக்கேணி, சென்னை-5.

உரிமை ஆசிரியருக்கே] 1955 [விலை 14 அணா

முதற் பதிப்பு : 1955

வள்ளுவர் அச்சகம், புரசை, சென்னை-7.

# முன்னுரை

செந்தமிழ் நூல்களில் படிக்கப் படிக்கச் சுவை தரும் பகுதிகள் பலவாக இருக்கின்றன. அவற்றுள் ஒரு பகுதி அந் நூல்களில்வரும் தூதுரைக்கும் பகுதியாகும். அப்பகுதிகளை மட்டும் அச் செந்தமிழ் நூற்கள் சிலவற்றினின்றும் எடுத்துத் தூது சென்ற தூயர் என்ற பெயரால் இந்நூல் வெளிவரலாயிற்று.

இந்நூல் மாணவ உலகிற்குப் பெரும்பயன் விளைத்து இலக்கியச் சுவையினை இனிது நுகரத்துணை செய்யும் என்பது என் துணிபு.

‘அம்மை அப்பர் அகம்’
77, அவதானம் பாப்பையர் வீதி,
சூளை, சென்னை-7.
1—8—55

ஆசிரியர்.

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 1. | தூதர் பண்பு | ... | ... | 1 |
| 2. | ஔவையார் | ... | ... | 6 |
| 3. | தியாகர் | ... | ... | 14 |
| 4. | அங்கதன் | ... | ... | 26 |
| 5. | வீரவாகு | ... | ... | 36 |
| 6. | உலூகன் | ... | ... | 46 |
| 7. | சஞ்சயன் | ... | ... | 55 |
| 8. | கண்ணன் | ... | ... | 62 |
| 9. | நளன் | ... | ... | 78 |
| — | பயிற்சி வினாக்கள் | ... | ... | 89 |

# தூது சென்ற தூயர்

## 1. தூதர் பண்பு

வள்ளுவர் வகுத்துக் கூறும் பகுதிகளில் தூதும் ஒன்று. இப்பகுதியில் தூதுரைப்பவர்களின் இயல்புகள் அனைத்தும் இனிதின் இயம்பப்பட்டுள்ளன. தூதர் பண்பு இன்னது என்பதை முன்கூட்டி அறிந்த பின்பு, இப் பண்பமைந்த தூதர், தூது இயம்பிய முறைகளை உணர்தல் இனிதின் இருக்கும் என்னும் எண்ணம் கொண்டே, இது முன்னர் விளக்கமாக எழுதப்படுவதாயிற்று.

தூது உரைப்பவர்களிலும் இரு வகையினர் உளர். ஒரு வகையினர் தம்மைத் தூது சென்று வரு

மாறு அனுப்பியவர் கூறியவற்றைக் கூறி வருபவர்களும், தாமாகவே சமயத்துக் கேற்ப வகுத்துக் கூறுபவரும் ஆக இருவகையினர் ஆவர். இனி, இவர்கள் பண்பைச் சற்றுப் பார்ப்போமாக. தூதுரைப்பவர் தம் சுற்றத்தவரிடத்து, அதாவது தம்மைச் சார்ந்தவரிடத்து, அன்புடையவராயும், நற்குடிப் பிறப்பினராயும், இருத்தல் வேண்டும். தமக்குமுன் தம் மரபில் தூது சென்றவர் எவரேனும் இருப்பின் அவர்களின் இயல்பையும் கேட்டு அறிந்து கொள்ளுதல் வேண்டும். தூது உரைப்பதில் தம் சுற்றத்தவர்க்கு யாதொரு தீதும் வராமல்படி காத்துக்கொள்ள வேண்டும். இவர்களது பேச்சுவன்மையால் எதிரிகளும் தம் வயத்தராதல் வேண்டும்.

இதனைத் தெற்றத் தெளியப் பாரத வெண்பா,

> அன்புடைமை ஆய்ந்த அறிவுடைமை இல்பிறப்பு
> நன்குடைமை நல்ல நயனுடைமை-நன்கமைந்த
> சுற்றம் உடைமை வடிவுடைமை சொல்வன்மை
> கற்றடங்கல் தூதின் கடன்.

என்று கூறுவதையும் காண்க. அன்பும் அறிவும் ஆராய்ந்த சொல்வன்மையும், ஆகிய இம் முப்பண்பும் மிக மிக இன்றியமையாதவை. ஆராய்ந்த சொல் வன்மை என்றதனால், தூதுவர் நல்ல கல்விப் பயிற்சி பெற்றவராய் இருத்தல் வேண்டும் என்பது பெறப்படு

சிறந்து அல்லவா? தூதுவர் எல்லா நூல்களையும் கற்று வல்லார்முன் அந் நூல்களைத் தாமும் கற்று வல்லவராய்த் திகழ்தல் இன்றியமையாதது. நூலை நன்கு ஓதியவர்களைக் காட்டிலும், அந் நூல்களை ஓதி உணர்ந்தவர் முன்னர் நூலின் திறனை வகுத்துக் கூறும் ஆற்றல் தூதுவர்க்குப் பெரிதும் வேண்டற்பாலதாகும். அறிவு வேண்டும்; கண்டார் விரும்பும் தோற்றப் பொலிவும் வேண்டும்; ஆராய்ந்த படிப்பும் வேண்டும். இந்த மூன்றையும் பெற்றவரே தூது உரைக்கச் செல்லத்தக்கவர் ஆவர்.

செய்திகளைப் பிறர் மாட்டுக் கூறுங் காலத்துத் தொகுத்துச் சொல்லவேண்டியவற்றைத் தொகுத்துச் சொல்லவேண்டும். இன்னாதது இருக்குமாயின், அதனைச் சொல்லும் காலத்து, இனிய சொற்களால் எதிரி மனம் மகிழும்படியும் சொல்லவேண்டும். இதனால் சுருங்கச் சொல்லவேண்டும் என்பதும், விரும்பாத சொற்களை நீக்கவேண்டும் என்பதும், மகிழுமாறு சொல்லவேண்டும் என்பதும் விளங்குகின்றன அல்லவா?

தூதராகச் சென்றவர், தம்மைத் தூது போக்கியவர் கூறியவற்றை எதிரியிடத்தில் கூறும்போது, அவ்வெதிரி கோபங்கொண்டு, தம்மைக் கொல்வான் போன்று சீற்றக் குறியுடன் பார்க்கவும் நேரிடும். அந்தக் காலத்திலும் சிறிதும் அஞ்சுதல் கூடாது. காலத்தை அறிந்து காரியம் முடிதற்கான முறையில்

பேசி நடந்து கொள்ளல்வேண்டும். இவற்றோடு தம் கடமையையும், காலத்தையும், இடத்தையும் அறிதல் தூதுவர்க்குத் தலை சிறந்த பண்பாகும். தம்மவர் நிலையினையும், எதிரிகளின் நிலைமையினையும் அறிந்து அவற்றிற்கு ஏற்பச் செயல் முறைகளைச் செய்தல் வேண்டும்.

தூதுவர்க்கு உள்ளத் தூய்மை வேண்டற்பாலது. பொருள் வெஃகலும் இன்பம் விழைதலும்கூடா, துணிவுடைமையும் வேண்டியதே. துணிவுடைமை யாவது திட புத்தியாம். தம்மை அனுப்பி, "இன்னவை கூறி வா" என்று கூறி விடுத்தபோது, தமக்கு ஏதேனும் தீங்குவருமே என்று கருதி, அஞ்சித் தம் தலைவர்க்குத் தாழ்வுவரும் வார்த்தைகளை வாய் சோர்ந்தும் சொல்லாத பண்பாடு, தூதுவர்க்கு முக்கியமானதாகும். மற்றும் வடுச் சொற்களை வழங்குதல் கூடாது.

தடுமாற்றம் இன்றித் தகைசான்ற சொல்லால்
வடுமாற்றம் வாய்சோரான் ஆகி-விடுமாற்றம்
அஞ்சாது கூறி இகல்வேந்தன் சீறுங்கால்
அஞ்சாது அமைவது தூது.

என்னும் பாரத வெண்பா வற்புறுத்துவதைக் காண்க. தம் உயிருக்கு ஆபத்து வருவதாயினும், அதன் பொருட்டுத் தம் உயிரைப் பாதுகாத்துக் கொள்ளத் தம்மை அனுப்பிய தலைவர் மொழிகளைப் பகைவ

ரிடத்தோ, அன்றி எதிரிக ளிடத்தோ கூருது, கூற வேண்டுவனவற்றை மறைத்துக் கூறுவது, தூதர்க்குக் கூடாது. இன்னோரன்ன இயல்பு படைத்தவரே தூது செல்லுதற்கு உரியவர். இவ்வியல்பினைப் பெற்ற பலருள் சிலர் தூது சென்று கூறிய முறைகளையே இனி 'வரும் வரலாற்றுக் குறிப்புக்கள் நமக்கு நன்கு அறிவிப்பனவாகும். அவற்றை இனிக் காண்போமாக.

# 2. ஔவையார்

சங்க காலத்தில் கடை எழுவள்ளல்கள் என்று குறிப்பிடத்தக்கவர்கள் பாரி, ஓரி, ஆய் அண்டிரன், திருமுடிக்காரி, நள்ளி, நெடுமான் அஞ்சி, பேகன் என்பவர்கள். இவர்களுள் ஒருவன் நெடுமான் அஞ்சி என்பவன். இவன் அதிகமான் நெடுமான் அஞ்சி எனவும், அதிகமான் தகடூர் பொருதுவீழ்ந்த எழினி என்றும் அழைக்கப்படுபவன். இவன் போரை விரும்பும் பொலங்கொள் தோளினன். போருக்குச் சென்றால், பெரிதும் வெற்றியுடன் திரும்பும் வீர தீரன். சேரன், சோழன், திதியன், எருமையூரன், இருங்கோ வேண்மான், பாண்டியன், பொருநன் என்னும் எழுவரையும் வென்ற வெற்றி வீரன். இவன் மழவர் குடிக்குத் தலைமையாக விளங்கியவன். தகடூருக்குத் தலைவன். குதிரை மலையும் இவனுக்கு உரியதே. இவனுக்கு வெட்சி மாலை அடையாள மாலையாகும். வேங்கை மலரும் கூவிளங் கண்ணியும் சூடும் சூரனுவான். இவன் சேர மன்னர் மரபின் தொடர்புடையவன் என்று கருதப் படுவதால், அம்மரபினர் மாலையாகிய பனந்தாரினையும் பாங்ுற அணியும் பார்த்திபன் ஆவான்.

நாம் இதுபோது கரும்பின் சுவையினை நன்கு சுவைக்கிறோம். இக்கரும்பு தமிழ் நாட்டில் தோன்று தற்கு ஆதி காரணர் இந் நெடுமான் அஞ்சியின் முன்னோரே ஆவர். அம் முன்னோர்கள் தேவர்களைப் போற்றிக் கரும்பினை அவ்விண்ணாட்டினின்றும் இம் மண்ணாட்டிற்குக் கொணர்ந்தவர்.

இன்னோரன்ன சீருக்கும் சிறப்புக்கும் பேருக்கும் புகழுக்கும் காரணனான அதிகமான் நெடுமான் அஞ்சிக்கும் தமிழ் நாட்டுக் கலைமகளாம் ஔவை மூதாட்டியாருக்கும் நெருங்கிய நட்புரிமையும் அன்புடைமையும் உண்டு. நெடுமான் அஞ்சி பொதுப்படப் புலவர்களிடத்தில் பேரன்புடையவனாயினும், சிறப்பாக ஔவைப் பெருமாட்டியாரிடம் அளவுகடந்த அன்பும் மரியாதையும் கொண்டிருந்தவன். இது அவன் இவ்வம்மையாருக்கு ஈந்த ஓர் அரிய பொருளினால் நன்கு அறியக் கிடக்கிறது. அதாவது நெடுமான் அஞ்சி கிடைத்தற் கரிய ஒரு நெல்லிக் கனியினைப் பெற்றனன். அக் கனி இரு மலைகளுக்கிடையே ஒரு பள்ளத் தாக்கில் கிட்டுதற்கரிய முள்ளும் புதரும் அடர்ந்து செறிந்து இருந்த இடத்தில் வளர்ந்திருந்த நெல்லிமரத்தின் உச்சங் கிளையின் பனியில் பழுத்து இருந்தது. இவ்வாறு இருந்த நெல்லிக் கனியினைப் பெற்றனன் அதிகமான் அஞ்சி. அக் கனிக்குத் தனித்தததொரு சிறப்பும் அமைந்திருந்தது. அக் கனியினை யார்

உண்ணுகின்றனரோ, அவர்கள் ஆயுள் நீடிக்கப்பட்டு நில உலகில் நீடு வாழ்வார்கள். இந்தப் பண்பு அந்தச் கனிக்கு உண்டு என்பதை அதிகமான் நெடுமான் அஞ்சி அறிவான்.

இத்தகைய கனி ஒன்று கிடைத்தால் நாம் என் செய்வோம்? நாமே உண்டு நெடுநாள் நில உலகில் வாழ விருப்பம் கொள்வோம் அல்லவா? இவ்வரிய கனியினைப் பிறர்க்கு ஈய முற்படுவோமா? அப்போது, "தனக்கு மிஞ்சிதானே தருமம்" என்ற பழமொழியும் நம் நினைவிற்கு வந்து நம் எண்ணத்தினை மேலும் உறுதி செய்துகொள்வோம் அல்லவா? ஆனால், அதிகமான் நெடுமான்அஞ்சி. அக் கனியினைத் தானே உண்ண எண்ணம்கொண்டிலன். அப்படி எண்ணம் கொண்டிருந்தால், அவன் எப்படி வள்ளல்களின் வரிசையில் வைத்துச் சிறப்பிக்கப்படுவான்? ஈந்தால் தானே இசைபட வாழ இயலும்? ஆகவே, அதிகமான் நெடுமான் அஞ்சி, அக்கனியினை ஔவையார்க்கு ஈந்து அகம் மகிழ்ந்தான். அக் கனியினை அவ்வம்மையார் உண்டபின், அதன் இயல்பினை 'அறிவித்தனன். முன்னர் அறிவித்திருந்தால் அவ்வம்மையார் அதனை உண்ண மறுத்து, அவனையே உண்ணுமாறு வற்புறுத்தவும் கூடும் என்பதே காரணமாகக்கொண்டு, அவன் முன்னர் அதன் தன்மையினை அறிவிக்காமல், பின்னர் அறிவித்தனன். ஔவையார் அதிகனுடைய தனக்கென

வாழாப் பிறர்க்கென வாழும் பெற்றியினைக் கண்டு பெரு மகிழ்வு கொண்டனர். அப்போது அவனைப் புகழ்ந்து வாழ்த்தினர். அவ்வாழ்த்து,

**போரடு திருவில் பொலந்தார் அஞ்சி**
**பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி**
**நீல மணிமிடற்று ஒருவன் போல**
**மன்னுக பெரும் நீயே தொல்நிலைப்**
**பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட**
**சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது**
**ஆதல் நின்அகத்து அடக்கிச்**
**சாதல் நீங்க எமக்குஈத் தனையே**

என்பது. இதன் பொருள் "எதிரிகளைப் போரில் கொல்லும் திருவினைப் பெற்ற வெற்றிமாலை அணிந்த அஞ்சியே, வெண்மையான பிறைச் சந்திரனை அணிந்த முடியினையும், நீலகண்டத்தையும் உடைய இறைவனைப் போல இந்நிலவுலகில் பல்லாண்டு வாழ்க. நீ பள்ளத்தாக்கில் மரத்தின் உச்சியில் விளங்கிய நெல்லிக்கனியினை அதன் தன்மையினை எனக்கும் குறிப்பிடாது என் இறப்பு நீங்க ஈந்தனை அல்லவா?" என்பது. இந் நிகழ்ச்சி ஒன்றே ஔவையாருக்கும் அதிகமானுக்கும் இருந்த அன்பின் எல்லையை இனிதின் விளக்கும். இதுநிற்க.

தொண்டை நாட்டில் காஞ்சிபுரத்தினைத் தலைநகராகக்கொண்டு, தொண்டைமான் இளந்திரையன்

என்பவன் அரசு புரிந்து வந்தனன். இவனைத் திரையன், திரையல், என்றும் புலவர்கள் குறிப்பிடுவர். இவன் கவி பாடும் காவலனும் ஆவன். இவன் பாடிய பாடல்கள் சங்க நூல்களில் இடம் பெற்றுள்ளன. இவனால் ஓர் ஊரும் உண்டாக்கப்பட்டுள்ளது. அது திரையனூர் எனப்படும். இத்தகைவன் தன் படைவன்மை காரணமாகவும், தன்னாட்டை மேலும் பெருக்கவேண்டும் என்பதற்காகவும், தன்படை வன்மையினை மேலும் மேலும் பெருக்கிப் போருக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தான். அவனுக்கு அதிகமான் நெடுமான் அஞ்சியைப் பொருது வெற்றி கொள்ளவேண்டும் என்பது நெடு நாளைய எண்ணமாகும். இதனை ஒற்றர் மூலமாக உணர்ந்தனன் அதிகமான் நெடுமான் அஞ்சி. அதிகமான் நெடுமான் அஞ்சி போர் என்ன வீங்கும் பொலங்கொள் தோளினன் என்றாலும், அவனுக்கு வரவரப் போர் செய்து வீணே மக்கள் மடிவது குறித்து இரக்கம் தோன்றலாயிற்று. எவ்வளவுக் கெவ்வளவு போராடாமல் சமாதானமாகச் செல்ல இயலுமோ, அந்த மார்க்கத்தையே கடைப்பிடித்து ஒழுகலாயினன். ஆகவே, தொண்டைமான் இளந்திரையனது உள்ளக் கிடக்கையினை உணர்ந்த அதிகமான், அவ்விளந்திரையன் வீணே பொருது அவனும் அவன் வீரரும் மடியாது இருக்கும் பொருட்டுத் தூதுவரை அனுப்பி அமைதியினை நிலைநாட்ட எண்ணினன். தூதுவராக யாரை அனுப்புவது என்ற எண்

ணமும் அவனுக்கு உடன் தோன்றியது. இவவெண்ணத்தின் முடிவு ஔவை மூதாட்டியாரையே தூதுவராக அனுப்புவது என்பதாயிற்று. வேறு எவரை அனுப்பினும் போருக்கு எழவே முடிவு ஏற்படும். ஆனால், ஔவையாரை அனுப்பினால், அப்படி ஒன்றும் ஏற்படாமல் எல்லாம் இனிது முடியும் என்ற நோக்கங்கொண்டே ஔவையாரையே தூது செல்லத் தீர்மானித்தான். அத் தீர்மானப்படியே ஔவையாரும் தொண்டைமான் இளந்திரையனிடம் தூது போயினர். தொண்டைமான் இளந்திரையன் ஔவை மூதாட்டியாரைக் கண்டதும், இன்முகம் காட்டித் இன்னுரை கூறி நல்வர வேற்றுச் சிறந்த ஆசனத்தில் அமரச் செய்து வணங்கித் தன் இருக்கையில் அமர்ந்தனன்.

ஔவையாரும் தொண்டைமானும் சிறிது நேரம் பல விடயங்களைப்பற்றி உரையாடினர். ஔவையாரும் தாம் இன்னதன் பொருட்டு வந்ததாக ஒன்றும் தொண்டைமானுக்கு உணர்த்திலர். அவனும் அவ் வம்மையாரை, " எங்கு? எதன் பொருட்டு வந்தீர்?" என்று வினவவும் இல்லை. ஔவையார் புலவர் சிகாமணியார். ஆதலால், அவர் பல்வேறு இடங்கட்குச் செல்லும் பான்மையர். அம்முறைப்படி தன்னிடம் வந்தவர், என்ற எண்ணத்தில் இளந்திரையன் இருந்தனன். என்றாலும், தன் படைவன்மை இவ்வளவு என்பதை ஔவை மூதாட்டியார் அறியின், ஒருவேளை அதிகனைக்

கண்டு உரைக்கவும் கூடும் 'என்று உளம்கொண்டு' தன் படைக்கலக் கொட்டிலைக் காட்ட அழைத்துச் சென்றனன்.

ஔவை மூதாட்டியார், படைக்கலங்கள் பலவும் புதியனவாகச் செய்யப்பட்டுக் கைப்பிடிகள் நல்ல உறுதியுடையனவாக அமைக்கப்பட்டு முனைகள் யாவும் கூர்மையுடையனவாய் இருக்கப்பெற்று நெய்யும் பூசப் பட்டு, மாலைகளும் சூட்டப்பட்டு இருக்கின்ற நிலையினை நன்கு கண்டனர். ஔவைப் பெருமாட்டியார் இது சமயம் தாம் வந்த கருத்தை அறிவிப்பதற்கும், தொண்டைமான் இளந்திரையன் படைவன்மையின் செருக்கை அடக்குதற்கும் என்று உளம்கொண்டு, "தொண்டைமான் இளந்திரைய! நின் படைக்கலம் கண்டு பெருமகிழ்வு கொள்கின்றேன். உன் படைக் கலங்கள் போர்முனை காணாதனவாய், கூர்மழுங்காமல், கைப்பிடிகள் தளராமல், மாலையணிந்து நெய் தடவப் பட்டு அலங்காரமாகப் படைக்கலச் சாலையில் கட்டு டன் இருக்கின்றன. ஆனால், அதிகமான் நெடுமான் அஞ்சியின் படைக்கலங்களோ எனில், போரில் மிகுதி யும் பயன்பட்டுப் பகைவர் உடலில் புகுந்து இரத்தக் கறை தோய்ந்து முனைகளில் தசைகள் பற்றப்பட்டுக் கைப்பிடிகள் தளர்ந்து கூர்மழுங்கி மீண்டும் போருக் குப் பயன்படும் நிலையினைப்பெறக்கொல்லனது உலைக் களத்தில் செம்மைபெறக் கிடக்கின்றன என்பதை,

**இவ்வே, பீலி அணிந்து மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்திநெய் அணிந்து
கடியுடை வியன்நகர் அவ்வே, அவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொல்துறைக் குற்றில !**

என்று பாடியருளினர். இதன் உள்பொருள், "உன் போர்க் கருவிகள் போர் முனை காணுமல் உன் அரண் மனையில் கிடக்கின்றன. அதிகனது படைக்கலங்கள் போர்முனை கண்டு நன்கு பழகி வெற்றி மாலை சூடிச் சிதைந்து கிடக்கின்றன. இத்தகைய படையினையுடைய அதிகமானுடன் நீ பகைகொண்டு போர் தொடுத்துப் பயனில்லை. வெற்றி அவனுக்கே அன்றி உனக்குக் கிட்டாது" என்பதாம்.

இளந்திரையன் நுண்ணறிவினன் ஆதலின், ஒளவையாரின் அமுதவாக்கின் உள்பொருளை உணர்ந்து அதிகனோடு அமர் புரிய இருந்த எண்ணத்தை விட்டொழித்தான். ஒளவையாரும் இளந்திரையனிடம் விடைபெற்று அதிகனை அடைந்தனர். தாம் தூது சென்று மீண்ட வரையில் நிகழ்ந்த யாவற்றையும் கூறினர். அதிகனும் மகிழ்ந்தனன். போரும் நின்றது. அறிஞர் முனைந்தால் ஆகாததும் உண்டோ ?

———:———

# 3. தியாகர்

இறைவன் எங்கும் நிறைந்தவனாயினும், குறிப்பிட்ட இடங்கள் பலவும் அவன் சிறப்புற வீற்றிருக்கும் இடங்கள் என்று நம் முன்னோர் கூறியுள்ளனர். அத்தகைய இடங்களில் திருக்கைலாய மலையும் ஒன்று. அங்கு உயிர்கட்கு அருள் புரியும் நோக்கோடு எழுந்தருளிய எம்பெருமானுக்கு அணுக்கராய் இருந்து தொண்டு புரிந்து வந்தவர்களில் **ஆலால சுந்தரர்** என்பவர் ஒருவர். அவரைப்போலவே உமாதேவியாருக்குப் பணிவிடை புரிந்தவர்கள் இருவர். அவர்களுள் ஒருத்தியின் பெயர் **அனிந்திதை** மற்றொருத்தியின் பெயர் **கமலினி** என்பது.

ஒரு சமயம் திருக்கைலை மலையின் பொழிலில் மலர் கொய்து கொண்டிருந்த ஆலால சுந்தரர், அம்மையாருக்கு மலர் பறிக்க வந்துற்ற மாதர்கள் இருவரையும் கண்ணுற்றனர். கண்ணுற்ற ஆலால சுந்தரர்க்கு அம்மாதர்களை மணந்து இன்ப வாழ்வு எய்த எண்ணினர். இவர் எண்ணியவாறே மங்கையர் திலகங்களும் மணங்கொண்டனர். உள்ளத்தால் தம் கருத்துக் கண்களால் பரிமாறிக் கொண்டவர், வாயால் ஒன்றும்

உரையாடிக் கொள்ளாமல் தம் தம் இருப்பிடம் சார்ந்தனர்.

எங்கும் கண்ணுளானாய் எங்கும் காதுளானாய் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனும் சிவபெருமான் தனது தொண்டன் உள்ளக் கருத்தையும், தன் தேவி யின் சேடியர் எண்ணக் குறிப்பினையும் அறிந்து அம் மூவரையும் விளித்து "நீங்கள் கொண்ட எண்ணங் குறித்து எமக்கு மகிழ்வே என்றாலும், உம் விழை வினை நிறைவேற்றிக்கொள்ள இஃது இடம் அன்று. ஆகவே, நீங்கள் நிலவுலகில் பிறந்து வேட்டவாறே கடிமணம் புரிந்து, பின்பு ஈண்டு அடைவீர்" என்று ஆணை பிறப்பித்தனன். அவ்வாணையினைத் தலைமேற் கொண்ட மூவரும் நில உலகில் தோன்றும் வாய்ப் பினைப் பெற்றனர்.

ஆலால சுந்தரர் திருமுனைப்பாடி நாட்டிலே திரு நாவலூரிலே ஆதிசைவ மரபிலே சடையனார் இசை ஞானியார் ஆகிய இருவர் செய்த தவப்பேற்றினால் திருமகனாராகப் பிறந்தருளினார். அப்போது இவருக்கு இடப்பட்ட பெயர் நம்பி ஆரூரர் என்பது. இவரைப் போலவே, கமலினியார் என்பவர் திருவாரூரில் உருத் திரக் கணிகையர் மரபில் தோன்றினார். அப்போது அவ்வம்மையார் திருப்பெயர் பரவையார் என்பது. இவ் வம்மையாரைப் போலவே அனிந்திதையாரும் ஞாயிறு என்னும் ஊரில் வேளாளர் மரபில் ஞாயிறு கிழார்

என்பவருக்குத் திருமகளாராகத் தோன்றினார். அது போது இவ் வம்மையாருக்குப் பெற்றோர் இட்ட பெயர் சங்கிலியார் என்பது.

நம்பி ஆரூரர் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்ந்து, இறையன்பு மீதூரப் பெற்றுச் சுந்தரமான தோற்ற முடையவராய் விளங்கி, இறைவன் உறைவிடங்களைத் தரிசித்து இன்புறும் பணியில் ஈடுபட்டிருந்தனர். இம்முறையில் சிற்சில திருத்தலங்களைத் தரிசித்துக்கொண்டு வந்தவர், திருவாரூரை அடைந்தனர். திருவாரூர் தியாகேசனைக் கண்டு இன்புற்றனர். இங்ஙனம் இன்புற்ற நம்பி ஆரூரர் முன்னைய ஊழ்காரணமாகத் தியாகேசப் பெருமானைத் தினமும் வழிபடும் முறைமையில் ஆலயத்திற்கு வந்த பரவையாரைக் கண்ணுற்று, அவரை மணக்க விரும்பினர். அவ்விருப்பம் தியாகேசர் திருவருளால் இனிது முடிந்தது. நம்பி ஆரூரர் நங்கை பரவையாருடன் இல்லறத்தை ஏற்று இன்புடன் வாழ்ந்து வரலானார். இங்ஙனம் நாட்கள் பல கடந்தன. முன்பே நம்பி ஆரூரர் இறைவன் எழுந்தருளிய திருத்தலங்களைத் தாம் நேரில் கண்டு தரிசித்து இன்புறும் தொண்டை மேற்கொண்டவர் என்பதைக் குறிப்பிட்டோம் அல்லவா? அந்த முறைமைக்கு முரணாகாது, தம்பிரான் தோழராம் சுந்தரர் பெருமான் தமது தலயாத்திரையை மேற்கொண்டு சோழ நாட்டிலுள்ள திருத்தலங்கள்

யாவற்றையும் கண்டு கை கூப்பித் தொழுது தொண்டை நாட்டை அடைந்தனர்.

தொண்டை நாட்டில் சிறப்புடன் விளங்கும் திருத்தலங்களுள் திருஒற்றியூரும் ஒன்று. அத் தலத்தில் உள்ள பெருமான் எழுத்தறியும் பெருமான் எனப்படுவார். இது கடற்கரை ஓரத்தில் உள்ள திருப்பதி. அதனால்தான், "தண்கடல் ஓதம் வந்துலவும் ஒற்றியூர்" என்று ஓதப்பெறும் சிறப்பினைப் பெற்றதாகும். இத் தலத்தில்தான் திருக் கையிலையினின்று தணந்துவந்த அனிந்திதை யம்மையாம், சங்கிலி நாச்சியார் மிகவும் உள்ளன்புகொண்டு இறைவனை வழிபட்டு வந்தனர். இவ் வம்மையார் மலர்களைக் கொய்து மாலையாகக் கட்டி மாதொரு பாகனுக்குச் சூட்டி மகிழ்ந்து வந்தனர். இத் தொண்டு முட்டின்றி நடந்து வந்தது.

இவ்வாறு இத் தொண்டினைச் சங்கிலி நாச்சியார் நடத்திக்கொண்டு வருகையில், சுந்தரராம் நம்பி ஆரூரர் எழுத்தறியும் பெருமானை ஏத்தித் தொழத் திருக் கோயிலை அடைந்தனர். எம்பெருமானைப் போற்றினார். இவ்வாறு போற்றியவர் கண்ணுக்குக் கண்ணுதல் பெருமான் கருணை காரணமாகச் சங்கிலியார் காட்சி அளித்தனர். அக் காரிகையாரைக் கண்டதும் உள்ளம் அவ் வம்மையார் அழகில் ஈடுபட்டது. அவ் வம்மையாரையும் மணந்து வாழ விரும்பினர். இவ்

வாறு இவர் விழைந்தது தவறு இல்லை என்பதை ஈண்டுக் குறிப்பிடவேண்டா அல்லவா ? இதற்குக் கார ணம் யாதெனில், நம்பி யாரூரரும் கமலினியாரும் அனிந்திதையாரும் கொண்ட எண்ணத்தை ஈடேற்ற வன்றோ வெள்ளியங்கிரியினின்று இம் மண்ணுலகு வந்து தோன்றி அருளினூர் ? இந்த முறையில் திருவா ரூரில் சுந்தரர் கமலினியாகிய பரவைநாச்சியாரைத் திருமணம் முடித்தனர். அதற்கடுத்த முறைப்படி அனிந்திதையாகிய சங்கிலி நாச்சியாரைத் திருஒற்றி யூரில் காண நேர்ந்தது. அவ் வம்மையாரைக்கூடி மணம் புரிய கேட்டது குற்றமில்லை அல்லவா ? ஆகவே, ஒற்றி யீசனைத் தனக்குச் சங்கிலியாரைத் திருமணம் செய்து வைக்கவேண்டி நின்றூர். இறைவரும் முன்னைய விதி யின் காரணத்தினை முன்னிட்டு ஒற்றியூர் அன்பர் களைக்கொண்டு மன்றல் வேள்வினை முடித்து வைத்த னர். நம்பி ஆரூரர் சிவபெருமான் இத் துணை எளிவந்து தம் கருத்தினை நிறைவேற்றி வைத்தமைக்குப் பெரிதும் மகிழ்ந்து அவனது திருவடிகளில் இடையருத இன்பங் கொண்டு போற்றி வந்தனர்.

நம்பி ஆரூரர் நங்கை சங்கிலியாருடன் சின்னுள் தங்கி, இன்பம் துய்த்து இனிது வாழ்ந்தனர். தம் பிரான் தோழர், யாத்திரை செய்வதில் பெரு விருப் புடையவர் ஆதலானும், தமக்குப் பரவை நாச்சியாரை மணம் முடித்துவைத்த திருவாரூர் தியாகேசப்பெரு

ரானை விட்டுப்பிரிந்து பலநாள் ஆனமையின், அவரைக் கண்டு தரிசிக்க வேண்டுமென்ற காரணத்தாலும், அத்துடன் முதல் மனைவியின் முகப்பொலிவைக் கண்டும் பல நாட்கள் ஆனமையின்: அதனையும் கண்டு அன்பால் இன்புற வேண்டுமென்றும் எண்ணி, திரு ஒற்றியூரை விட்டுப் பிரிந்து இடையில் பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு, இறுதியில் திருவாரூரை அடைந்தனர்.

திருவாரூரில் பரவை நாச்சியார் தமது அன்புக்குரிய ஆரூரர் தம்மைத் தணிந்து போனநாள் தொட்டுப் பிரிவு ஆற்ருமையால் மிகவும் துன்புற்றிருந்தார். இவ்வாறு காதலர் பிரிவால் கலக்கமுற்ற இவ் வம்மையார்க்குக் கலக்கத்தின்மேல் ஒரு கலக்கம் இவருடைய காதில் வந்து வீழ்ந்தது. அதாவது தல யாத்திரை காரணமாக வெளி நாடுகளுக்குச் சென்ற தம் காதலர் தொண்டை நாட்டை அடைந்து திருஒற்றியூராம் திருத்தலத்தைத் தரிசித்துப் பின் ஆண்டிருந்த சங்கிலி நாச்சியார் என்பாளையும் மணந்து இன்புற்றனர் என்பதாகும். இச் செய்தி பரவையார்க்கு வெந்த புண்ணில் வேல் நுழைந்தது போல இருந்தது. " நாம் ஒருத்தி இருக்க மற்ருெருத்தியின் மீதும் சுந்தரர் உள்ளம் சென்றதே " என்று துன்பம் மேலிட்டு, நம்பியாரூரர் மீது சினங் கொண்டிருந்தனர்.

நம்பி ஆரூரர் நேரே தம் இல்லமாகிய பரவையார் திருமாளிகைக்குச் செல்லாமல், ஆரூர் தியாகேசன்

அலரடி வணங்கிச் செல்லவேண்டுமென்று ஆலயஞ் சென்று வழிபாடு ஆற்றி வருவதற்குமுன் தம் வருகையினை முன்கூட்டிப் பரவையார்க்கு அறிவிக்குமாறு தம் பரிசனங்களுக்குச் சொல்லி விட்டனர். அவர்கள் பரவையார் மாளிகையை அணுகிச் செய்தியினைச் சொல்ல முனைந்தபோது, சுந்தரர்மீது கொண்ட சீற்றம் காரணமாக, அவர்களை உள்ளே விடவும், வெளியில் உள்ளார் மறுத்து விட்டனர். இதற்குக் காரணம் இன்னது என்பதை அறிந்த பரிசனங்கள் சுந்தரரிடம் "பெரும! நீர் தொண்டைநாட்டில் திருஒற்றியூரில் சங்கிலியார் என்பவரை மணந்ததைப் பரவையார் உணர்ந்து உம் மாட்டுச் சினம் மிகுதியும் கொண்டிருக்கிறார். அதனால் நாங்கள் உள்ளே செல்ல இயலவில்லை." என்றனர். நம்பி யாரூரர் இதைக் கேட்டுத் துணுக்குற்று அறிஞர் ஒருவரை அம்மையார் மாளிகைக்குச் சென்று சீற்றம் தணிக்குமாறு செப்பிவிட்டனர். அவர்களும் அப்படியே சென்று பரவையாரைக் கண்டு சமாதான மொழிகள் பல சாற்றியும் அவ் வம்மையார், "பெரியீர் நம்பியாரூரரைப் பற்றி ஒன்றும் என்னிடம் கூறுதிர். அவர் குற்றம் உடையவர். அவர் சார்பில் நீரும் பேசினால் என் உயிர் என் உடலில் நில்லாது." என்று உறுதியாகக் கூறிவிட்டனர். அதற்குமேல் ஒன்றும் பேச வழி அற்றவராய்த் திரும்பித் தேவாசிரிய மண்டபத்தில் அமர்ந்து பலவாறு எண்ணிக் கொண்டிருந்து சுந்தரரை அணுகிப் பரவையார் உள்ளக்

டைக்கையினை உரைத்தருளினார். தம்பிரான் தோழர், "இனி எம்பெருமானைத் தவிர்த்து இவ்விடர்க் கடலி னின்று ஏற்றுவார் எவரும் இலர்" என்று எண்ணித் திருவாரூர் தியாகேசனை நோக்கி, "வள்ளலே! என் செயல்களுக்கெல்லாம் காரணம் முன்னைய ஊழ்வினை அன்றோ? அதனை முடித்து வைக்கின்றவனும் நீயே அல்லனோ? ஆகவே, பரவையின் பிணக்கத்தினை நீதான் தீர்க்கவேண்டும்" என்று விண்ணப்பித்துக் கொள்ள,

"நாயன் நீரேநான் உமக்கு இங்கு
அடியே னுகில், நீர்எனக்குத்
தாயின் நல்ல தோழருமாம்
தம்பி ரானு ரேஆகில்
ஆய அறிவும் இழந்தழிவேன்
அயர்வு நோக்கி அவ்வளவும்
போயிவ் இரவே பரவைஉறு புலவி
தீர்த்துத் தாரும்" என,
அன்பு வேண்டும் தம்பெருமான்
அடியார் வேண்டிற் றுறவேண்டி
முன்பு நின்று விண்ணப்பம்
செய்த நம்பி முகம்நோக்கித்
"துன்பம் ஒழிநீ யாம் உனக்கோர்
தூதன் ஆகி இப்பொழுதே
பொன்செய் மணிப்பூண் பரவைபால்
போகின் "றோம்என்று அருள் செய்தார்.

இவ்வாறு அருள் செய்தவர் பரவையார் மாளிகை நோக்கிப் புறப்பட்டார்: புறப்பட்டவர் தமது சிவ் மூர்த்தத்துடன் செல்லுதல் கூடாதென்று, தம்மைத் தினமும் பூசிக்கும் குருக்கள் வடிவுடன் சென்றனர்: இவர் சென்ற நேரம் இரவு ஆதலின், கதவு சாத்தப் பட்டிருந்தது. கதவு சாத்தி இருந்ததால் திரும்பிச் செல்லின் சுந்தரர் மனம் துன்புறுமே என்று கதவைத் தட்டி, "பாவாய், திறவாய்" என்றுகூறியருளினர். இவ்வாறு கூறிய வார்த்தைகளைக் கேட்ட பரவையார் "இக்குரல் தியாகேசரை அர்ச்சிக்கும் அர்ச்சகர் குர லாகும்" என்று அறிந்து கதவைத் திறந்து உள்ளே வரவேற்று ஆதனத்து இருத்தி, "பெரியீர்! இவ் விரவில் நீர் இங்கு எழுந்தருளியது யாது காரணத் தாலோ?" என்று பணிவுடன் வினவினர்.

பரமனே தூதராக வந்துள்ளார் அல்லவா? தூத ராக வருபவர் சொல்வனவற்றைச் சாதுரியமாகப் பேசித் தாம் வந்த காரியத்தை முடிக்க வேண்டும் அல்லவா? ஆகவே தம், சமத்காரம் தோன்ற "மாதே, நான் கூறுவதை மறுமல் செய்வதாயின், நான் வந்த காரணத்தை அறிவிக்கின்றேன்" என்றனர். அம் மையார் அவ்வளவு எளிதில் விடைகூறி விடுபவரோ? அவரும் மிகுந்த விழிப்போடு "நீர் கருதியதைக் கூறி ஞல் அது என்ஞல் செய்யக்கூடிய நிலையில் இருக்கு மாஞல், தடையின்றிச் செய்து முடிக்கின்றேன்"

றனர். உடனே அர்ச்சகர் வடிவில் வந்த ஆரூர் தியாகேசராம் தூதர், "மின்னல் போன்ற இடையுடைய மாதே, நம்பி ஆரூரன், இங்குவர நீ இசைய வேண்டும்" என்றனர். அம்மையார் அம் மாற்றத்திற்கு விடை பகரும் நிலையில்,

"பங்குனித் திருநா ளுக்குப்
பண்டுபோல் வருவா ராகி
இங்கெனைப் பிரிந்து போகி
ஒற்றியூர் எய்தி அங்கே
சங்கிலித் தொடக்குண் டாருக்கு
இங்கு ஒரு சார்வுண்டோ நீர்
கங்குலில் வந்து சொன்ன
காரியம் அழகி" தென்றார்.

இந்தவாறு பரவையார் கூறக் கேட்ட தியாகேசர் நங்கையே, "நம்பி செய்த குற்றங்களை மனத்தில் கொள்ளற்க. கோபம் தணிக. உனது புலவி நீக்க அன்றோ யாம் உன்னை வேண்டுகின்றோம். அப்படி இருக்க நீ மறுத்தல் அடாது" என்றனர். பரவையார் தாம் கொண்ட கோட்பாட்டை விட்டுக் கொடுத்திலர். மாதர்கள் எதை இழக்கினும் தம் வாழ்வைப் பங்கிட்டு வாழ ஒருக்காலும் உளம் கொள்ளார் ஆதலின், அந்த முறைமைக் கேற்ப," ஐயா! நம் நம்பியாரூரர் சார்பில் நீர் இங்கு வந்து பேசுதல் உம் பெருமைக்கு ஏற்ற

தன்று. ஒற்றியூரில் உரிமைகொண்ட வீர ரிங்கு வர யான் இசையேன். நீரும் வந்த வழியே செல்லலாம்'' என்று கூறிவிட்டனர்.

தியாகேசராகிய தூதர் தாம் யார் என்பதை அப்போது காட்டிக் கொள்ளாமல், பேசாமல் எழுந்து தம் தோழரைக் கண்டு நடந்த வண்ணம் நவின்றார். அவ்வாறு கூறக்கேட்ட தம்பிரான் தோழர், 'ஆ! நீர் சென்று கூறியும் கூடவா என்னை வரச் சம்மதித்திலள்? இனி என் உயிர் என் உடலில் இருந்து என்ன பயன்? இறைவ, நீர் அவள்பால் என்னை இணைத்திலீர் எனில், யான் உயிர் விடுவேன்.'' என்றனர். தியாகேசர் தம் தோழரது துணிவு கண்டு மீண்டும் பரவைபால் தூது போயினர்.

இதற்கிடையில் பரவையார்க்கு, '' தூதாக வந்தவர் ஆலய அர்ச்சகர் அல்லர். ஆரூர் தியாகரே அர்ச்சகர் வடிவில் வந்துற்றனர், அந்தோ! அறியாமல் அடாத வார்த்தைதனைக் கூறி விட்டோமே '' என்று பலவாறு எண்ணித் துயில் கொள்ளாது துன்புறுவாராயினர். தியாகேசர் பரவையார் மாளிகைக்கு மீண்டும் வந்தனர். பரவையார் ஓடோடியும் சென்று ஒண் மலர்ப்பாதம் பணிந்து வரவேற்றனர். இறைவரும் நங்கையை நோக்கி,'' நங்கைபரவாய் நாம் சுந்தரன் பொருட்டு உன்பால் மீண்டும் வந்தனம். நீ அவனை இனி மறுமல்

ஏற்று முன்போல ஒரு மனப்பட்டுவாழ வேண்டும்.'' என்றனர். அது போது அம்மையார்,

துளிவளர் கண்ணீர் வாரத்
 தொழுது விண்ணப்பம் செய்வார்
'' ஒளிவளர் செய்ய பாதம் வருந்த
 ஓர் இரவு மாறாது
அளிவரும் அன்பர்க் காக
 அங்கொடிங் குழல்வீ ராகி
எளிவரு'வீரு மானால்
 என்செய்கேன் இசையா '' தென்றார்.

இந்த உறுதிமொழி பெற்ற தியாகராம் தூதுவர் சுந்தரர்பால் வந்து, பரவையார் இணக்க மொழியினை எடுத்து இயம்பினர். இந்த மொழிகளைக் கேட்ட நம்பி யாரூரர் இன்பக்கடலில் மூழ்கியவராய், இறைவர் திருத்தாள்களை வணங்கிப் பின்பு பரவையார் மாளிகை புக்கனர். பரவையாரும் நல்ல முறையில் வரவேற்றனர். அதன்பின் இருவரும் கலந்த அன்பினராய் இல்லறத்தினை இனிது நடத்தி வந்தனர். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ ?

# 4. அங்கதன்

இராமாயணத்தில் குறிப்பிடத்தக்கவர் ஒரு சிலர் உண்டு. அவர்களுள் ஒருவன் வாலி. இவனே சுக்ரீவன் தமையன், இராமனால் கொல்லப்பட்டவன். இவனது மைந்தன் அங்கதன். அவனும் தனது பணியினை இராமனுக்குச் செய்துள்ளான். அப்பணியாவது இராமன் பொருட்டு இராவணன்பால் தூது சென்று மீண்டதாகும். தூதராகச் செல்பவர், தூதுரைக்கும் பண்பும் ஆற்றலும் பொருந்தப் பெற்றிருக்க வேண்டும். இப் பண்பும் ஆற்றலும் இவ் வங்கதன்பால் உண்டு. இதனை உணர்ந்த இராமன், அவனையே இராவணனிடம் தூது அனுப்ப முடிவு செய்தனன். தன் முடிவினைத்தானே முடிவு கட்டி விடாமல், தன்னை அடைக்கலம் புகுந்த விபீடணனுடன் கலந்து ஆய்ந்த பின்பே, அங்கதனைத் தூது போக்க விழைந்தனன். ஆகவே, வீடணனை நோக்கி, "விபீஷணா! இராவணனிடம் தூதன் ஒருவனை அனுப்பிச் சீதையினை விடுகின்றனையா? இல்லையா? என்பதைக் கேட்டறிவோம். இதற்கேற்ப அவன் சீதையை விட மறுத்தால், பின்பு அவனோடு போரிட்டுச் சீதையை மீட்போம். இதுதான்

அறனும் நீதியும் ஆகும் என்று எனக்குத் தோன்று கிறது '' என்றனன்.

இவ்வாறு இராமன் கூறக்கேட்ட இராவணனது இளவலாம் விபீடணன் " இராமா, நீ கூறுவது முற்றி லும் அழகிய கருத்தேயாகும்'' என்று தன் கருத்தினை யும் கூறினன். குரங்குகட்குத் தலைவனான சுக்ரீவன், ''இரகு குலதிலக, தூது போக்குதல் மன்னர்க்குரிய நீதிமுறையாகும்,'' என்று மொழிந்தனன். ஆனால், இளவலாம் இலக்குவன்மட்டும், ' அண்ணா, பிறரிடம் சென்று ஒன்றை இரப்பது இழுக்காகும், ஆகவே, அம்பு தொடுத்து அரக்கனை அலக்கழித்துச் சீதையை விடுதலை செய்தலே உசிதம். இராவணனிடம் தூது விடுக்காது போரில் அவனைக்கொல்வதே முறை. அவன் தேவியைச் சிறையிட்டவன்; தேவர்கட்குத் துன்பம் விளைவித்தவன்; அந்தணர்கட்கு அலக்கண் புரிந் தவன்; உயிர்களை வாட்டி வதைப்பவன்; ஆசையின் மிகுதியினால் அகில மெல்லாம் தானே ஆள எண்ண முள்ளவன்; இந்திரன் துய்த்தபோகம் எல்லாவற்றையும் அவனை வென்று பெற்றவன்; வழியற்ற வழியில் செல் பவன்; நீ துன்புறும்படி உன் தேவியை உன்னை விட் டுப் பிரித்து வைத்தவன்; சீதைமீது இரக்கம்கொண்டு எதிர்த்த சடாயுவையும் கொன்ற மகாபாவி. மற்றொன் றையும் உனக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். நீ கூறியனுப்பும் முறைப்படி அவன் ஒருவேளை சீதை

யினைச் சிறைவீடு செய்தால் பின்பு போர் நிகழுமா? போர் நிகழாதாயின் இராவணன் கொல்லப்படுவானா? அவன் கொல்லப்பட்டிலன் எனில், அவனுக்குரிய அரசை உன்னை அடைக்கலம் புகுந்த விபீடணனுக்கு ஈவதாகக் கூறிய வார்த்தையினை நீ எப்படி நிறை வேற்ற முடியும்? ஆகவே, போரிடவே முடிந்த முடி யன்றித் தூது போக்கலில் எனக்கு விருப்பம் இல்லை.'' என்று தன் கருத்தாகக் கூறி முடித்தான். இலக்குவன் கூறியவற்றை நன்கு அமைவுறக் கேட்ட இராமன், "தம்பி இலக்குவ! யான் போருக்கு அஞ்சித் தூது போக்குவதாக எண்ணவேண்டா? அறிஞர்கள் ஆய்ந்து முடிவு கட்டிய அரச நீதியினின்றும் நாம் பிறழலாமா? அரசராவார் தூது போக்கியே, எதிரி களின் உள்ளத்தை அறிந்த பின்பே ஆவன செய்தற்கு முன்வருவர். அவ்வாறு இருக்க, நீதி நெறியினின்றும் சிறிதும் பிறழாத சூரியகுல தோன்றல்களாகிய நாமா நீதியினின்று மாறுபடுவது? புயவலி படைத்தவராயி னும் பொறுமையோடு பொருந்தி வாழ்வதே வெற்றி யுடன் வாழ்தற்கு முறையாகும்'' என்று நீதி நெறி களை எடுத்துக் கூறினன். இவ்வாறு இராமன் விளக்க மாக இயம்பக் கேட்ட யாவரும் தூது விடுதல் முறை யென்று ஒவ்வினர். பின்னர் யாரைத் தூது போக்கு வது என்பதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கை யில் இராமன் வாலியின் மகனான அங்கதனையே தூது விடுதல் தக்கது என்றும், பகைவர் தம் வீரத்தால் எது

செய்யினும் அதனை எதிர்த்து யாதொரு தீங்கும் இன்றித் திரும்பவல்ல ஆற்றல் அவனுக்கே உண்டு என்றும் கூறி வாலியின் சேயை அழைத்து, "நீ இராவணன்பால் சென்று, சீதையைச் சிறை வீடு செய்கின்றனையா? அன்றிப் போருக்கு வருகின்றனையா? இந்த இரண்டில் எதைச் செய்ய இருக்கின்றாய்? என்று கூறி ஒரு முடிவு பெற்று வருக" என்று ஏவினன். தான் தூதாகச் செல்ல வேண்டிய பொறுப்பு ஏற்பட்டதே என்ற உள்ளக் களிப்பினால் அங்கதன் உடல் பூரித்தனன். அவன் தோள்கள் குன்றினும் பொலிவுற்றுத் தோன்றின.

அங்கதன் இராமன் திருவடிகளில் நிலனுறப் பொருந்தி வணங்கினான். "மாருதிக்கு அடுத்தபடி நம்மைத்தான் இராமர் எண்ணியுள்ளார் போலும்! எனக்கு நிகர் யவர் உளர்"? என்று எண்ணி மகிழ்வுற்றான். அம்மகிழ்வு காரணமாகச் சிங்கம் ஒன்று ஆகாய வழியே செல்வது போலவும், இராமன் தன் வில்லில் தொடுத்துவிட்ட அம்பு வேகமாகப் போவது போலவும் வான்வழியே சென்றான்.

அரக்கரை வென்று அமைதி நிலவச் செய்யத் திருப்பாற் கடலைத் துறந்து அயோத்தியில் வந்து அவதரித்த திருமாலாம் இராமனது சொல்லினைத் தலைமேற்கொண்ட அங்கதன்; மேரு மலையினும் உயர்ந்த மதில்கள் சூழ்ந்த இலங்கா புரியினை அணுகி

னன். இராவணன் அரண்மனையினையும் அடைந்தனன்.

இராவணன் அவையில் வீற்றிருந்த தோற்றத்தைக் கண்ட அங்கதன் பலவாறு அவனைப்பற்றி எண்ணவும் தொடங்கினான். "ஆ! என்ன கம்பீரமான தோற்றம்! இவனைக் கொல்ல ஓர் இயமன்கூட இருக்க முடியுமா ? ஆ! என்ன மடமை எனக்கு! இவனைக் கொல்ல இராமன் கை அம்பு உண்டல்லவா இதனை அறியாது இவ்வாறு கூறி விட்டனனே ?" என்று தன் மனத்துக்குள் ஒன்றுக்கொன்று ஒவ்வாத முறையில் பலவாறு எண்ணினன்.

இவ்வாறு பலவாறு எண்ணிய அங்கதன், கடுமையான கனலும் விடமும் இயமனது கொடுமையும் ஒன்று சேர்ந்து, கைகள் பெற்று, ஒளியுடைய முடி புனைந்து கருங்கடல் உருக்கொண்டு வீற்றிருந்தால் போல வீற்றிருந்த இராவணன் அவையினை நெருங்கினான்.

தன் எதிரே சிறிதும் அஞ்சாது வந்து நிற்கும் அங்கதனைக் கண்ட தசக்கிரீவன் கண்களில் தீப்பொரி பறக்கக் கோபக் குறியுடன், "அடே நீ யாவன் ? இங்கு நீ வந்த காரணம் யாது? இங்குள்ளவர் உன்னைக் கொன்று புசிப்பதற்கு முன்பு நீ வந்த காரணத்தை விரைவில் கூறுக" என்று அதட்டிக் கேட்டனன்.

இந்த வெஞ்சின மொழிகளைக் கேட்டு வாலி மைந்தன் சிறிதும் வெருக்கொண்டிலன். விலாப்

புடைக்க நகைத்திட்டான். என்றாலும், நகைத்த அளவில் நிற்காமல் தன்னை வினைய வினாக்களுக்கு விடைகூற வேண்டுமென்று கருத்தினனாய், 'இராவணா' என்னை யாவன் என்று வினவுகின்றாய்? யான் சீதை நாயகனான இராமன் விட்ட தூதன். அவன் கூறி அனுப்பிய மொழியினை உனக்குக் கூறவே ஈண்டு வந்துளன். அவனைச் சாதாரணமானவன் என்று கருதி விடாதே, "அவன் பூத நாயகன்; புவிக்கு நாயகன்; தெய்வ நாயகன்; நீ கூறும் வேத நாயகன், விதிக்கும் நாயகன்;" என்றனன். இப்படி அங்கதன் அடுக்கி அறைந்திட்ட மொழிகளைக் கூறக்கேட்ட இராவணன் நகைத்து," "குரங்குகளைக் கூட்டிக்கொண்டு சேது கட்டி உன்னை இங்கு அனுப்பிய நரனையா, நீ உலக நாதன் என்று கூறினை? நன்று நன்று உன் வார்த்தைகள்,"

" எனது திருமுன் மும்மூர்த்திகளும் வர அஞ்சுவர் அவ்வாறு இருக்க, நீ ஒரு மனிதன் பொருட்டு அஞ்சாது என் முன் வந்துற்றனை. ஆக நீ யாவன்? உன் வரலாற்றைக் கூறுக." என்று அதட்டிக் கேட்டனன். அங்கதன் ஒரு குறும்புக்காரன். இராவணன் கொட்டம் அடங்க எப்படித் தன்னைப் பற்றிக் கூறினால் நன்கு அமையும் என்று சிந்தித்து நேரே தான் வாலியின் மகன் அங்கதன் என்று கூறாமல், " இராவணன் என் பவனைத் தன் வாலில் கட்டி மலைகள் பல தாவிச்

சென்றவனும், தேவர்கள் அமுதம் உண்ணத் திருப் பாற்கடலைக் கடையப் பெருந்துணையாய் இருந்தவனும் ஆகிய வாலி என்பானுடைய மகன் யான்,'' என்பதை

“இந்திரன் செம்மல் பண்டோர்
இராவணன் என்பான் தன்னைச்
சுந்தரத் தோள்க ளோடும்
வாலிடைத் தூங்கச் சுற்றிச்
சிந்துரக் கிரிகள் தாவித்
திரிந்தனன் தேவர் உண்ண
மந்தரக் கிரியால் வேலை
கலக்கினுன் மைந்தன்'' என்ருன்

இப்படி அங்கதன் சொல்லக் கேட்ட இராவணன் கோபம் தணிந்தவனாய், “ஆ அப்படியா ? உன் தந்தை யான வாலி என் நெருங்கிய நண்பனுவான். உனக்கு யான் வானரத் தலைமையினைத் தாழாது தருகின்றேன். நீ இங்கு வந்தமை குறித்து உளம் மகிழ்கின்றேன். உன் வரவு நல் வரவு ஆகுக.''

''நல்ல காரியம் செய்தனை. என் நண்பன் மகனுதலின் நீ ஏற்கும் மகன் என்னும் உரிமையை யான் ஏற்கின் றேன். என்றாலும், என் நண்பனும் உன் தந்தையு மான வாலியைக் கொன்ற ஒரு நரனுக்காக நீ தூது வந்ததுதான் பேதைமையாகும். என்றாலும், என்னை அடைந்து விட்டனை. இராமனிடம் கைகூப்பி, வாய்

போற்றி வாழும் வாழ்வினை அகன்று, இங்கு வந்து சேர்ந்து விட்டனை, சீதையைப்பெற்றேன். உன்னை யும் மகனுப் பெற்றேன். இதனினும் எற்கு என்ன பெரிய வாழ்வு உளது? அந்த நரர்களாகிய இராம இலக் குமரர் இன்றே நாளையோ அழிந்து போவர். இதில் ஐயம் இல்லை. உறுதியே யாகும். வாலியின் அரசை உனக்கே தந்தனன். பல்லூழிக்காலம் அரசு செய்வா யாக, யானே உனக்கு மகுடாபிஷேகம் செய்ய நீ சிங்கா தனத்தின்மீது அமர்ந்து தேவரும் மற்று யாவரும் போற்ற அரசு செய்க" என்று நட்பு முறையும், உறவு முறையும் அன்புடைமையும் உள்ளவன் போல இரா வணன் இவ் வார்த்தைகளை அறைந்திட்டான்.

இவ்வாறு உறவும் நட்புங்கொண்ட உளத்தோடு இராவணன் உரைப்பக் கேட்ட அங்கதன், கையோடு கைதட்டித் தோளும், மார்பும், குலுங்கச் சிரித்து, "இராவணா! இராமஇலக்குவர்கட்கா அழிவு ஏற்படப் போகிறது? இலங்கையில் இருப்பவர்கட்கு அழிவு ஏற்படப்போகிறதே என்ற காரணத்தால் அல்லவா உன் தம்பியாகிய வீடணன் எங்கள் தலைவனும் இராமனைச் சரண் புகுந்தனன். உன் பேச்சு வன்மை யால் என்னையும் உன் வசப்படுத்தப் பார்க்கின்றனை போலும்! தூதுவராக வந்தவர் தூதர் கடமையினை ஆற்றாது அரசை ஏற்பது அறன் ஆகுமா? அதுவும் நீ கொடுக்க யானு அரசு பெறுவேன்? நீ கொடுக்க

யான் பெறுவது, நாய் கொடுக்கும் அரசைச் சிங்கம் பெறுவது போன்றதாகும் " என்று கூறிச் சிரித்தான்.

அங்கதன் தன்னைச் சிறிதும் மதியாது கூறும் மொழிகளைக் கேட்டு, அடங்காச்சினமுற்றவனாய், " சரி நீ வந்த காரியம் என்ன ?" என்று கேட்டனன். அப்போது அங்கதன், " இலங்கை வேந்த! என்னைக் கருணை வள்ளல் அழைத்து உன்பால் சென்று வருமாறு பணித்துத் தேவியை விடுக. அன்றிப் போருக்கு வருக என்பதை அறிவிக்கக் கூறினன். இரண்டில் எதைச் செய்ய விருப்பம் உளது ? உள்ளக் கிடக்கையை ஒளியாது நன்கு சிந்தித்து உரைக்க. ஆனால், உன்பால் வைத்த இரக்கம் காரணமாக உனக்கு ஒன்று கூறுவல் கேட்டி. உனக்கு நன்மையாவது சீதையைச் சிறைவீடு செய்து இராமனை வணங்கி உன் சுற்றத்துடன் நல்வாழ்வு நடத்துவதேயாகும். இவ்வாறு செய்யாது போர் இடத் துணிந்தாயாயின், போருக்குப் புறப்படுக " என்றனன். இந்தவாறு இழிசொற்களைக் கூறக்கேட்ட இராவணன் கோபங் கொண்டு, " இவனைப் பிடியுங்கள் ; கட்டுங்கள் " என்று நால்வரை ஏவினன். இராவணன் கட்டளை ஏற்றவர் அங்கதனைப் பிடித்துக் கொண்டனர். பிடித்தவர்களை அங்கதன் பிடித்துக்கொண்டு கோபுர வாயிலில் எறிந்தான். பின்பு சந்திரன் ஆகாயத்திலிருந்து கீழே இறங்கியது போல, வானவழியே தாவிச் சென்ற அங்கதன் இறங்கி

இராமன் திருவடிகளில் வணங்கினான். வணங்கக் கண்ட இராமன் சென்றுவந்த செய்தியினைக் கூறுமாறு பணித்தான். அங்கதனும் சென்ற செய்தியினைப் பாரித்து உரைக்காமல் சுருக்கமாகக் கூறத் தொடங்கியவன்,

> உற்ற போதுஅவன் உள்ளக் கருத்தெலாம்
> கொற்ற வீரன் உணர்த்தென்று கூறலும்,
> " முற்ற ஓதியென் மூர்க்கன் முடித்தலை
> அற்ற போதன்றி ஆசைஅறான் " என்றான்.

இவ்வாறு அங்கதன் கூறக்கேட்ட இராமன், வேறு வழியின்றி இராவணாதியரோடு போரிட ஆயத்தமானான்.

———:———

# 5. வீரவாகு

சூரபதுமன் என்பான் மிக மிக வலியன். ஆயிரத் தெட்டு அண்டங்களுக்கு அதிபதி. அவன் தேவர் களுக்கு மிகவும் தீங்கிழைத்தவன். அவர்களைச் சிறைப்படுத்தியவன். அவன் கடல் நடுவில் பல காவலைப் பெற்று விளங்கிய மகேந்திர புரத்துக்கு அதிபதி. அத்தகையவன் பெறற் கரியவரமும் திருவும் வாய்க்கப் பெற்றும், அவற்றைக்கொண்டு நன்முறை யில் வாழாமல் தருக்குற்றுச் செருக்குற்று வாழ்ந்து வரலானான். அன்னவனது அட்டகாசங்களைக் கேள்வி யுற்ற கந்தப் பெருமான், அவனையும் அவனைச் சார்ந்த அசுரர்களையும் அழித்து விண்ணவர்களைச் சிறையி னின்று விடுவித்து, அவர்களை முன்போல் விண்குடி ஏற்றத் திருவுள்ளங்கொண்டனன். முருகப்பெருமான் எண்ணியபடியே உடனே இயற்றும் போராற்றல் பெற்றிருந்தும், நீதி நெறியினின்றும் சிறிதும் தவறுதல் கூடாதென்று, "முதலில் தூதன் ஒருவனைச் சூரபதும னிடம் போக்கி, தேவர்களைச் சிறை நீக்குமாறு கூறுவோம். அதற்கு அச் சூரபதுமன் இசைந்திலன் எனில், அவனோடு போர் தொடுத்து, அவனையும் அவன் இனத்தையும் மாய்ப்போம்" என்று தீர்மானித்து அறு

மைப் பண்ணவன் தனக்கு நிகரான வன்மை மிக்க வீரவாகு தேவரைத் சூரபதுமனிடம் தூது போக்கத் தீர்மானித்தனன். இந்தக் கருத்துக்குத் திருமால் பிரமன் முதலியோர் ஒவ்வினர்.

பின்னர் வீரவாகுவிடம் " வீரவாகு ! மாகேந்திரம் சென்று சூரபதுமனைக் கண்டு, இந்திரன் மகனை சயந்திரனையும், மற்றும் உள்ளவர்களையும் சிறை வீடு செய்யுமாறு செப்புக. இதனைச் செய்ய அவன் மறுத்தால் நாளையே போருக்கு ஆயத்தமாக இருக்கும் படி கூறிவிட்டு வருக " என்று குமரன் கூறி அனுப்பினன்.

வீரவாகுதேவரும் குமரக் கடவுளை வணங்கி வீர மாகேந்திரம் செல்லப் புறப்பட்டார். புறப் பட்டவர் கந்தமாதனப் பருவதம் வந்துற்றார். அங் கிருந்து இடையே கிடந்த கடலினைத் தாவி மகேந்திர புரியினை அடைந்தனர். அடைந்தவர் சூரபதுமனது நகர்வளம் நாட்டுவளம் கண்டு, இந்திரன் மகன் சயந் தன் சிறைப்பட்டுக் கிடந்த இடத்தை அணுகி, அவனைத் தேற்றி, " விரைவில் முருகப்பெருமான் உன்னையும் தேவர்களையும் சிறைவீடுசெய்வார் " என்று உறுதி கூறிச் சூரபதுமன் அவையினை அணுகினர்.

சூரபதுமன் சிங்காதனத்தில் சிறக்க வீற்றிருந் தனன். தேவமாதர் ஆலவட்டம் வீசிக்கொண்டிருந்

தனர். அசுரர் அடைப்பை தாங்கி நின்றனர். நடன மாதர் நடனமாடிக் கொண்டிருந்தனர். பஞ்சகருவிகள் இசையினை இசைத்துக் கொண்டிருந்தன. இந்த நிலையில் இன்புடன் இருந்த சூரபதுமன்முன் வீரவாகு தேவர் தோன்றினர். அவன் தனக்கு ஓர் ஆதனம் அளிப்பதற்குத் தாமதம் செய்யவே இறைவன் அருளால் ஓர் ஆதனம் அங்கு வரப்பெற்று அதனிடை அமர்ந்தார்.

சூரபதுமன்முன் வீரவாகுதேவர் இறுமாப்புடன் வீற்றிருந்ததைக் கண்ட அவையினர் பலவாறு சிந்தனை செய்தனர். சூரனுக்கும் வீரவாகுதேவர் தன் முன் சிறிதும் அஞ்சாது வீற்றிருந்தது குறித்துப் பெருஞ் சினம் எழுந்தது. "சிறிதும் அஞ்சாது என்முன்அமர்ந் திருக்கும் நீ யாவன்? சொல்லுக" என்று கேட்டனன் சூரபதுமன். உடனே வீரவாகுதேவர் சிறிதும் அஞ்சாது, "நான் குமாரக் கடவுளால் அனுப்பப்பட்ட தூதன். என் பெயர் வீரவாகு என்பது. உனக்கு நல்புத்தி கூறி நீயும் உன்னைச் சார்ந்தவர்களும் பிழைத்து நல் வாழ்வு வாழத் தேவர்களையும் சயந்தனையும் சிறை நீக்குமாறு கூறி புத்தி புகட்டி வருமாறு என்னை அனுப்பியுள்ளார்" என்றுகூறித்தாம்வந்தகாரணத்தைத் அறிவித்தனர்.

**மெய்மை நீங்கியே கொலைகளவு**
**இயன்று மேல்உள்ள**

செம்மை யாளரைச் சீறியே
அணங்குசெய் தீயோர்
தம்மில் ஆற்றரும் பழிசுமந்து
ஒல்லையில் தமரோடு
இம்மை விடுவர் எழுமையும்
துயரினூடு இருப்பார்

"இதனை நீ அறியாதது என்னே! நீ பெற்ற ஆயிரத்தெட்டு அண்ட அரசும், அழியா வச்சிர தேகமும் நீண்ட ஆயுளும் மற்றுள்ள சகலபோகமும் அழிவுறாமல் இருக்க, நீ விரும்பினால் அவர் கூறியனுப்பியபடி தேவர்களைச் சிறை நீக்குக. பிழைக்க. முருகப் பெருமானின் வன்மையினை நீ, முன்பே அறிந்துள்ளாய். அன்னார் திருக்கை வேல்உனது இளவலான தாரகனது மார்பையும் கிரௌஞ்ச கிரியையும் பிளந்த வன்மையிருந்தது. அஃது உன் மார்பைப் பிளத்தல் அரிதன்று. எளிதே. என்றாலும் சாம பேத தான தண்டமாகிய அரச முறைப்படி உன்மாட்டு வைத்த கருணையினால் திருச்செந்தூரில் இதுபோது வந்து தங்கியுள்ள குமாரக் கடவுள் உன்பால் என்னைத் தூது விடுத்தனன், ஆகவே, நன்கு சிந்தித்து உனது கருத்தினை வெளிப்படுத்துக." என்று நயமும் பயமும் கலந்த மொழிகளைக் கழறினர்.

இங்ஙனம் வீரவாகு கூறக் கேட்ட சூரனது கண்களில் தீப்பொறி பறந்தன. சினத்தால் கைகளைத் தட்டி,

**மேலை ஆயிரத்து எட்டுஎனும்**
**அண்டமும் வென்றே**
**ஏலுகின்றதோர் தனிஇறை**
**ஆகிய எனக்குக்**
**கோலவால் எயிற்று இன்னமும்**
**தோன்றி லாக்குதலைக்**
**பால னேகொலாம் இனையன**
**புந்திகள் பகர்வான்**

"அதாவது ஆயிரத்தெட்டு அண்டங்கட்கு அதிபதியாகிய எனக்கா பல் முளைக்காத பாலன் புத்தி சொல்பவன்? வெகுநன்று, வெகுநன்று. தேவர்கள் அசுரர்களுக்குக் கொடுமை செய்தனர். அதனால் சீற்றங்கொண்ட யான் அவர்கள் செல்வத்தைக் கெடுத்து அவர்களை எனக்குக் குற்றேவல் புரியுமாறு செய்தேன். சிறையிலும் அடைத்தேன். ஆகவே, நீ எத்துணை அளவுக்குக் கூறினாலும் அவர்களை விடுதலை செய்யேன். உனக்குப் பலவாறு மொழிந்து யாது பயன்? நீ சிறு பாலன் பேச்சைக் கேட்டு இங்கு வந்தனை. நீ தூதுவனாக வந்துள்ளாய். ஆதலால் இவ்விடம் விட்டுப் பிழைத்துப்போக உனக்கு உயிர் பிச்சை தந்தேன். செல்க" என்றனன்.

வீரவாகு சூரபதுமனுடைய வார்த்தைகளைக் கேட்டுச் சினம் பொங்கி, "கீழ்மகனே! எங்கள்

குமாரக் கடவுளையா நீ பாலன் என்று எண்ணினாய்

ஈச னேஅவன் ஆட்லால்
மதலை ஆயினன்காண்

ஆசுஇ லாஅவன் அறுமுகத்து
உண்மையால் அறிதி

பேசில் ஆங்கவன் பரனொடு
பேதகன் அல்லன்

தேசுஉ லாஅகல் மணிஇடைக்
கதிர்வரு திறம்போல்.

ஆராவது,'' குமரன் ாவன் தெரியுமோ? அவனே பெருமானவன். திருவிளையாடற் காரணமாகக் குழந்தை வடிவு கொண்டனன். அவனுக்கும் பரமனுக்கும் பேதம் இல்லை. மணியினின்றும் ஒளி எப்படி வேறுபடாது வெளிவருமோ அதுபோல இவ் விருவரும் வேறுபாடற்றவர். ஏகநாயகராம் முதல்வனை நீ பாலன் என்று இகழ்ந்தாய். யான் உன்மொழி கேட்டுப் பொறுத்தனன். உன் நாவை இந்தக் கணம் துண்டித்திருப்பேன். ஆனால், அவ்வாறு செய்யுமாறு அறுமுகன் ஆணையைப் பெற்றிலேன். உன்பால் தூதுதான் போக விடுத்தனரே அன்றி, நீ சுடுசொல் கூறினால், உன் நாவினைத் துணிக்குமாறு கூறிலர். இன்னமும் உனக்

குக் கூறுவன கேட்டி. நீயும் உ கிளைஞரும் பிழைக்க எண்ணினால், தேவர்களைச் சிறைவீடு செய்க. உனக்குள்ள பகைமையைப் போக்குக. அறுமுகப் பண்ணிவன் அடிமலர்களை அரணமாகக் கொள்ளுக.'' என்று கருணையும் இரக்கமும் தோன்றக் கூறினர், சூரபதுமன் இந்த வார்த்தைகட்குச் செவி சாய்ப்பானோ? அவ்வார்த்தைகள் எரியும் கொள்ளியில் எண்ணெய் விடுவதுபோல, அவனுக்கு மேலும் மேலும் சீற்றத்தினை எழச் செய்தன. எனவே, கோபங்கொண்ட அசுரர் குலத் தலைவன், வீரவாகுவை நோக்கி, "தூதனைப் போந்தவனே, பல் மூளைக்காத பாலன் வி த்த தூதன் ஆயிற்றே நீ என்று, உன் இதுவரை ஒன்றும் செய்யாது பொறுத் உன் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தேன். ஈண்டுநின்று நீ அகலாமல் அச்சிறுவன் பெருமைகளையே பேசிக் கொண்டுள்ளாய் அவன் வீரத்தைப் பற்றி விளம்பிக் கொண்டிருக்கிறாய். நீ கூறுகிறபடி அவன் மேலானவனாயினும் ஆக, யான் அவனுக்குச் சிறிதும் அஞ்சேன். யான் தேவர்களை வென்றவன். அப்படி இருக்கத் தேவர்களைச் சிறையினின்றும் விடுவிக்கக் கனவினும் நினைகிலேன்'' என்றனன். பிறகு தன்னைச் சூழ இருந்த அசுரர்களை நோக்கி, "இவன் தூதனாக இப்போது நம்முன் தோன்றியுள்ளான். ஆதலால், அவனைக் கொல்லல் பழியும் பாவமும் ஆகும். ஆனால், ஒற்றரையும் தூதரையும் சிறையிடல் அரச முறையாகும். ஆகவே

இவனைச் சிறைசெய்க.'' என்ற 'கட்டளையினைப் பிறப்பித்தனன்.

கட்டளையினைப் பெற்ற அரக்கர்கள் உடனே எரிபோல் விழித்து, நெருப்பைப் புகைசூழ்வதுபோல, அரனால் கொடுக்கப்பட்ட ஆதனத்தில் அழகுடன் வீற்றிருந்த அண்ணலாம் வீரவாகு தேவரைச் சூழ்ந்து பற்றத் தொடங்கினர். தன்னைப் பற்ற வந்த அசுரர்களைத் தம் கையால் பிடித்துச் சூரபதுமன் வீற்றிருந்த அவையிலேயே தரையில் மோதினர். அவர்களுள் பல்லோரின் மார்புகள் ஒடிந்தன. அவற்றினின்று இரத்தம் பீறிட்டது. உயிரும் போயது. இந்த நிலையில் வீரவாகு தேவர் சூரபதுமனை நோக்கி, "அசுரர் தலைவ! இனி நீ பிழைத்தல் அரிது. எம்குமாரப் பெருமானது கூரிய வேல் உன் மார்பைக் குத்திப் பிளந்தே தீரும், இது திண்ணம். பொய் ஆகாது. அதற்குமுன் உன் ஐம்புலன்களும் ஆரத் துய்க்க வேண்டிய மற்றை ஆசை தீரத் துய்த்துவிடு. நான் விடைபெற்றுக் கொள்கின்றேன்.'' என்று கூறி எழுந்தனர். அவர்க்கு இறைவனால் கொடுக்கப்பட்ட தவிசும் மறைந்தது.

சூரபதுமன் சீற்றத்தின்மேல் சீற்றம் கொண்டவனாய் வீரவாகுதேவரைச் சிறையிடச் சதுமுகன் என்பானை ஏவினன். அவன் வீரவாகு தேவரை நெருங்கிப் பிடித்தபோது அவனையும் கொன்றார். மற்றும் பலரை

யும் அழித்து அதன்பின் சூரபதுமனது நகரத்தையும் அழிவு செய்தனர்.

வீரவாகு தேவர் தம் வன்மையினை வீரமகேந்திர புரியில் காட்டி மீண்டும் கடலைக் கடந்து செந்தில் மாநகர்ச் சேர்ந்து செவ்வேள் பரமன் சேவடி வணங்கினர். குமாரக் கடவுள் வீரவாகு தேவரைப் புன்னகை கொண்டு வரவேற்று, "சென்ற காரியம் யாதாயிற்று?" என்று வினவினார். வீரவாகுதேவர் தாம் சென்று சூரனைக்கண்டு தேவர்களைச் சிறைவீடு செய்யுமாறு கூறியும் அவன் அது செய்ய ஒருப்படாது போருக்கே ஆயத்தமாய் இருப்பதைக் கூறினர். இவ்வாறு கூறக்கேட்ட ஏந்தலாம் முருகப்பெருமான் நகைத்து "நீ தூது சென்று மீண்டதை மட்டும் கூறினாய். ஆனால், நீ ஆண்டு புரிந்த ஆற்றலைமட்டும் அறைந்திலையே. அதனையும் கூறுக" என்று வற்புறுத்தவே, வீரவாகு தேவர்,

"தொடக்கம் உற்றுவாழ் சூரன் மாநகர்
அடுத்த காலையின் அகன்ற வேலையில்
தடுத்து ளோரைநின் சரண வன்மையால்
படுத்து வந்தனன் பான்மைஈது" என்றான்.

அதாவது, "யான் சூரன் வாழ் இடமான மகேந்திர புரியினை அடைந்தபோது என்னைச் சில அரக்கர் தடுத்தனர். அவர்களை யான் உன் திருவடிமீது வைத்துள்ள

பற்றுக் காரணமாகவும், துலாக்காரணமாகவும் அழித்து ஒழித்து மீண்டனன். இதுவே என் ஆற்றலால் புரிந்த அருஞ் செயல்" என்று கூறினர். அறுமுகப் பரமனும் அவ்வீர மொழிகளைக் கேட்டு மகிழ்வுற்றனன்.

பின்னர்க் குமாரப்பெருமான், சிறைபடாது தப்பிய சில தேவர்களை நோக்கி, "தேவர்காள்! நாம் சூரபதுமன் உய்யும் பொருட்டு அரச முறைப்படி தூதுவனை அனுப்பித் தேவர்களைச், சிறை நீக்கக்கூறினோம் "கெடுமதி கண்ணுக்குத் தோன்ருது" என்னும் முதுமொழிப்படி அச் சூரபதுமன் நம் வார்த்தைகளைக் கேட்டு அவ்வானவரைச் சிறை நீக்கம் செய்திலன். அவனுக்கு அழிவு நேர விதி அமைந்திருக்கையில் எப்படித் தேவர்களை விடுதலை செய்வான். ஆகவே. நாளையே அவனை எதிர்க்கப் புறப்படுவோம்" என்று கூறினுன். அரி, அயன் முதலிய தேவர்களும் குமரன் கட்டளையைக் கேட்டு அவன் வழி ஒழுகக் காத்து நின்றனர்.

# 6. உலூகன்

மக்களைக் கெடுக்கும் பழக்கங்கள் பலவற்றுள் சூதாடலும் ஒன்றாகும். அதாவது சூதாடுதல் ஒன்றாகும். இதனை விளக்க வேண்டுமென்ற கருத்தோடே வள்ளுவப் பெருந்தகையார் சூது என்னும் தலைப்புங் கொடுத்து ஓர் அதிகாரமே பாடி, இச் சூதினால் விளையக்கூடிய தீமைகளை எடுத்து விளக்கியும் உள்ளார்.

சூதாட்டம் நமக்குப் பொருள்வருவாயை முதலில் காண்பிக்கும். அவ்வாறு பொருள் வருதலைக் கண்டு அதில் ஈடுபட்டால் பின்னால் விளைவும் பயன் மிக மிகத்துன்பந் தருவதேயாகும். இச் சூதினால் வரும் சிறு பொருள் தூண்டிலில் இருக்கும் இரையை உண்ண வந்த மீன், பின் தன் உயிரையே இழப்பது போன்றது. ஒரு பொருளைக் கருதி நூறு பொருளை இழக்கச் செய்யவல்லது இச் சூது. இதனால் வறியர் ஆக நேரிடும். இன்பம் அடைந்து வாழும் மார்க்கம் ஏற்படாது. இச் சூதாட்டமானது முன்பு இல்லாத பல துன்பங்கள் பலவற்றைத் தரும். சீர்மையைக் கெடுக்கும். உணவு உண்டு வயிறு நிரம்பி வாழச் செய்யாது. பொருளை அழிவு செய்வதோடு நில்லாமல், பொய் கூற

...செய்யும். அருட்குணம் அமையப் பெறுமல் செய் ...ம், அந்தோ! இச் சூதினுல் உடை, செல்வம். உணவு ...ம், கல்வி ஆகிய இந்த ஐந்தும் அமைய மாட்டா. ...வை அமைந்தில எனில், மனிதன் மனிதனுக வாழ ...டியுமோ? இத்தகைய தீமைகள் இச் சூதாட்டத்தி ...ல் ஏற்படும் என்பதைத் தொகுத்துப் புகழேந்தியார்,

" உருவழிக்கும் உண்மை நலனழிக்கும் வண்மைத்
திருவழிக்கும் மானம் சிதைக்கும்—ஒருவர்
ஒருவரோ டன்பழிக்கும் ஒன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து

...ன்று கூறியுள்ளார்."

இங்குக் கூறப்பட்ட இன்னல்களுக்கு ஆளானவர் ...ள் பஞ்ச பாண்டவர்கள். அவர்கள் துரியனேடு ...தாடி. நாடு நகரங்களைத் தோற்றுப் பன்னிரண்டு ...ஆண்டுகள் காட்டில் வாழ்ந்து அதன்பின் ஓர் ஆண்டு ...வர் கண்ணுக்கும் புலனுகாமல் மறைந்து வாழ்ந் ...தனர். இப்படி வாழ்ந்த பிறகுதான் அவர்கள் சூதி ...னுல் இழந்த நாட்டைத் திருப்பிக் கொடுப்பதாகத் ...துரியன் வாக்களித்திருந்தான். அந்த வாக்கின்படி ...ந்துகொண்ட பஞ்சபாண்டவர் பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பின் தம் நாட்டை மீண்டும் பெற ...தற்கு வழிதேடலாயினர். இதன் பொருட்டுப் பஞ்ச பாண்டவர் கிருட்டினனேடு ஆலோசிக்கத் தொடங்கி

னர். மாயன் பஞ்சபாண்டவர்களை நோக்கி, "நீங்கள் சூதாடி நாடு நகரங்களை இழந்தீர். அந்நாடு நகரங்களை மீண்டும் பெறவேண்டினால் முன் ஆடிய சூதினை மீண்டும் ஆடியே பெறுதல் முறையாகும். போர் தொடுத்து வில்லாண்மை காட்டிப் பெறுதல் அரச முறை அன்று." என்று தன் கருத்தைக் கூறினான்.

பாண்டவர்கள் கூட்டிய ஆலோசனைக் குழுவில் கிருட்டினனது தமையனான பலராமனும் இருந்தனன். அவனுக்கு நாட்டைத் துரியனிடமிருந்து பெறுவது குறித்து அவ்வளவு பிடித்தம் இல்லை. ஆகவே, அவன் "தருமா, நீங்கள் சூதாடி உடைமைகளைப் பறி கொடுத்துவிட்டீர். ஆகவே, துரியன் நீங்கள் தோற்ற நாடுகளைத் தன் கீழ்ப்படுத்திக் காத்து பதின்மூன்று ஆண்டுகளாக ஆண்டு வருகிறான். அவற்றை மீண்டும் பெற எண்ணுதல் கொடிது" என்று கூறினான். இந்த வார்த்தையைக் கேட்ட சாத்தகி என்பவன் பலராமன் கூறியதைக்கேட்டு, "நீ கூறிய வார்த்தைகள் பொருள் அற்றவை." என்று கடிந்து மொழிந்தனன். இந்த நிலையில் இவ்வாறு ஒன்றுக்கொன்று முரணான முறையில் அவையில் இருந்தவர்கள் மொழிவதையும் கூறக்கேட்ட கிருட்டினன், "சரி, நாம் இனிச் செய்யவேண்டுவது துரியனிடம் தூது அனுப்புவதாகும். ஆகவே, உலூக முனிவரைத் துரியன் தந்தையாகிய திருதராட்டிர

னிடம் தூது அனுப்பி, அவன் கருத்தை அறிவோம்" என்று முடிவு கட்டினன். இம் முடிவினைத் தலைமேற் கொண்ட தருமர் உலூகமா முனிவரைத் தூது அனுப்ப மனங்கொண்டார். தருமர் உலூகமா முனிவரை வணங்கி, "முனிவரே, நீர் எம் பொருட்டுத் துரியன் தந்தையாகிய திருதராட்டிரனிடம் தூதுசென்று, எம் கருத்தினை அவரிடம் கூறுங்கள். எனது பணிவான வணக்கத்தினை வீடுமருக்கும் விதுரருக்கும், துரோணாச்சாரியாருக்கும் அறிவியுங்கள்" என்று சொல்லி அனுப்பினர்.

உலூகமா முனிவர் முரசக் கொடியோனாகிய தருமர் விரும்பியபடி அரவக் கொடியோனும் துரியன் அரசு புரியும் அத்தினபுரிக்குச் சென்றார். திருதராட்டிரன் சபையினை அணுகினார். வந்தவர் முனிவர் ஆதலின், துரியன் நன் முறையில் வரவேற்று, திருவடிகளை வணங்கி ஆதனம் அமர்த்தி, அதில் அமரவேண்டினன். வீடுமர் விதுரர் முதலியவர்களும் உளம் கலந்த அன்புடன் உலூகர்க்கு வணக்கம் செய்தனர். அதன் பின் அங்கு இருந்தார் முனிவரை வந்த காரணத்தினை உசாவத் தொடங்கினர்.

உலூகமா முனிவர் தருமர் கூறியனுப்பியபடி முதலில் வீடுமர், விதுரர், துரோணர் முதலியோர்க்குத் தருமர் வணக்கம் கூறச் சொன்னதைக் கூறிப் பின்னர்த் திருதராட்டிரன், துரியன், கன்னன், சகுனி

பெரியோர் மனம் வெகும் வண்ணம் தாம் வந்த காரணத்தைக் கூறத் தொடங்கினர்.

" துரியோதனுதியர்களே, பஞ்சபாண்டவர் உம்முடன் சூதாடி நாடு நகரங்களைத் தோற்றனர். பின்னர் உம் கட்டளைப்படி பன்னிரண்டு ஆண்டுகள் காட்டில் வாழ்ந்து, அதன் பின் ஓர் ஆண்டு எவரும் அறியா வண்ணம் மறைந்து இருந்து இப்போது வெளிப்பட்டு வந்துள்ளார். இவ்வாறு வாழ்ந்த பின்னர் நாட்டிற்கு வந்தால் வென்ற நாடுகளை மீண்டும் அவர்கட்கு அளித்திடுவதாக வாக்களித்த வண்ணம் அவர்கட்குரிய நாட்டினை நீங்கள் அளிப்பீரோ? அளியீரோ? உமது கருத்தினை அறிவியுங்கள். போர் தொடுத்து நாட்டைப் பெறுதல் அவ்வளவு பொருத்தமாகப் புலப்படவில்லை. நீர் முன்னர் ஆடிய சூதினை மீண்டும் ஆடி அவர்கள் பெறுதற்கு ஒரு வாய்ப்பினைத் தருக. இல்லையேல் சண்டை செய்து அப்பாண்டவர்கள் தாம் இழந்த தம் நாட்டைப் பெற்றுக் கொள்ளட்டும் என்று கூறினும் கூறுக." என்று கூறி மேலும், " ஆனல், போர் ஏற்படின் நீங்கள் வெற்றி காணுதல் அரிது. பாண்டவர் வெற்றி பெறுதல் திண்ணம். வீரமிக்க வீமனும் அர்ச்சுனனும் போரில் ஈடுபட்டால் நீங்கள் அழிதல் திண்ணம். இது உண்மை. முனிவனுகிய என் உரை பழுதாகாது என்ற கருத்தில்,

அன்றியே அவருடன் மலைகுவம் என

அழிவினைக் கருதாமல்

வென்றியே நினைந் தெதிர்த்திரேல்
உங்களால் வெல்லுதல் அரிதம்மா !
கன்றியே அடல் வீமனும் விசயனும்
களம்புகில் அனைவரும்
பொன்றி யேவிடுகின்றனிர் முனிவர்சொல்
பொய்க்குமோ ? பொய்யாதே.

என்று அஞ்சாது அறைந்திட்டார். இத்தகைய துணிவு துறவிகளிடத்து அமைந்திருப்பதனால் அன்றோ, தெய்வப் புலவர் சேக்கிழார் பெருமானார் "வீரம் என்னால் விளம்பும் தகையதோ?" என்று விளம்பியும் உள்ளார்.

உலூகமா முனிவர் உரைத்த மொழிகளைக் கேட்ட அரவக்கொடியோன் ஆத்திரம் கொண்டான். உடனே முனிவரைப் பார்த்து, "நீங்கள் புகழும் வீமார்ச்சுனர் வீரத்தையும் எமது வீரத்தையும் இப்போது ஒப்பிட்டுப் பார்ப்பதில் பயன் இல்லை. போர் முகத்தில் பார்த்துக் கொள்ளலாம்" என்று படபடத்துப் பகர்ந்தான். இந்தவாறு பாம்புக் கொடியோன் பகர்ந்ததைக் கேட்ட வில் விதுரர் துரியனை நோக்கி, "துரியா, அவசரப்பட்டு அறையாதே. முனிவர் கூறியபடி நாட்டினை அவர்கட்குத் தந்துவிடு. அப்படித் தாராமல் இழிசினர் மொழிகளைக் கேட்டு நடப்பாயானால் திருமகள் உன்னை விட்டு விலகுவதோடு அல்லாமல், நம் சுற்றமும் சேனை

யும் அழியும் '' என்று அன்புடன் எடுத்துக் கூறினர். அதன்பின் துரோணாசாரியாரும் கிருபாசாரியாரும், துரியனைப் பார்த்து, " துரியா, நீ முன் சொன்ன வாக்குப்படி அப் பஞ்சபாண்டவர்கட்கு நாட்டை அளித்துவிடு. இதுதான் அறம். இவ்வாறு செய்யாமல் படை திரட்டிப் போருக்கு ஆயத்தம் ஆதல் பெரும் பிழையாகும். முனிவர் கூறியபடி அர்ச்சுனன் தன் வில்லை வளைத்துச் சமர் செய்ய முன் நிற்பனாகில் அவன் முன் எந்த வில்லி எதிர் நிற்க இயலும்?'' என்று கூறினர். வீடுமரும் திருதராட்டிரனைப் பார்த்து, " திருதராட்டிர, உன் இளவலான பாண்டுவின் குமாரர்களான பஞ்ச பாண்டவர்கட்குக் கழித்து வரவேண்டிய காலமாகிய பதின் மூன்று ஆண்டுகளும் கழிந்தன. அவர்கள் நீங்கள் கூறியபடி தம் நாட்களைக் கழித்த பிறகே வந்து நாட்டினை நல்குமாறு கேட்கின்றனர். அவர்கட்கு அந் நாட்டினைத் திருப்பித் தந்து விடுதலே தக்கது. அவ்வாறு இன்றி அமர் செய்தல் முறையன்று. அர்ச்சுனன் முன் எவரும் அமர் செய்ய இயலாது.'' என்று உண்மையினை ஒளியாமல் சிறிது சினத்தோடும் உரைத்திட்டார்.

இவ்வாறு வீடுமர் புகலக் கேட்ட கன்னன் பொறுத்திலன். அவன் ஒரு சிறந்த வில்லாளியல்லவா? ஆகவே, காங்கேயனாகிய வீடுமரை நோக்கி,

"பெரியீர், என்போன்ற வில்லாளி ஈண்டுவீற்றிருக்கப் பொதுவாக இவ்வாறு இழித்துப் பேசலாமோ ?" என்று சினத்துடன் வினவலானான். வீடுமருக்குக் கன்னன் கழறிய மொழிகளைக் கேட்டதும் கோபம் வந்தது. அக் கோபத்தைக் கோப மொழியுடன் பேசி வெளிக்காட்டாமல் சாந்தமான மொழிகளில் கன்னனுக்கு நல்ல புத்திமதிகளைக் கற்பித்து அவன் தலை குனியும் வகையில் அவனைப் பார்த்து, "கன்ன, நீ சிறந்த ஆண்மையும் வில் வன்மையும் உடையவன் என்பது மிக நன்கு வெளியாகியது. துருபதனுடைய மகள் திரௌபதையை மணம் முடித்த நாளில், நீ தானே அந்த அர்ச்சுனனுடன் எதிர்த்துப் போரிட்டு வென்றவன் ! கந்தருவருள் ஒருவனாகிய இந்திரசேனன் துரியனைக் கட்டித் தூக்கிச் சென்றபோது அந்தக் கந்தருவனோடு போரிட்டுத் துரியனை மீட்டவன் நீ தானே ! அவ்வாறு இருக்க நீ வீரம் பேசுவதில் யாது பயன் ? நீயா, கண்ணன் தேரினைச் செலுத்தப் போர்க்களத்தில் பொலிவுடன் தோன்றும் அர்ச்சுனன்முன் எதிர் நின்று போர் செய்ய வல்லவன் ?" என்று பழிப்பும் இழிப்பும் கலந்து பகர்ந்திட்டார்.

இந்தவாறு வீடுமர் புகலக் கேட்ட துரியன் மேலும் சினம்கொண்டு, தூது உரைக்க வந்த உலூகமாமுனியைப் பார்த்து, "ஐயா, நீர் மீண்டு செல்க. நாட்டையான் கொடேன். நாடு எம்முடையது"

என்று தன் உள்ளத்தின் எண்ணத்தை ஒளியாது உரைத்திட்டான். இந்தச் செய்தியினை உலூகமா முனிவர் பாண்டவரிடம் மொழிந்திட்டார்.

# 7. சஞ்சயன்

பஞ்சபாண்டவர்களால் அனுப்பப்பட்ட உலூக மாமுனிவர் துரியன்பால் தூது சென்று மீண்ட செயல் முன்னர்க் கூறப்பட்ட தன்றோ? அதன்பின் கௌரவர் தாம் சும்மா இருத்தல் அடாது என்று சிந்தித்துத் தாமும் ஒரு தூதுவரைப் பாண்டவர்பால் அனுப்பித் தம் கருத்தை உணர்த்த எண்ணினர், அதன் பொருட்டுப் பாண்டவர் எப்படி முனிவர் ஒருவரை அனுப்பினரோ அதுபோலவே, துரியோதனதியரும் ஒரு முனிவரையே தருமர் ஆதியோர்க்கும் தம் உள்ளக்கருத்தை ஒருங்கே உரைக்க ஒரு முனிவரைத் தூது போக்க உளம் கொண்டனர். அதன்படி சஞ்சயமாமுனிவரைத் தூது அனுப்புவதாகத் தீர்மானித்தனர். சஞ்சய முனிவரை வருமாறு ஆளைப் போக்க, அவரும் அத்தினபுரம் வந்து சேர்ந்தார்.

திருதராட்டிரன் பஞ்சபாண்டவரின் பெரிய தந்தையே யானலும் பட்சபாத முடையவனகவே இருந்தனன். பாண்டவர்கள் தன் இளவலான பாண்டுவின் புதல்வர்கள் ஆவர். முறைப்படி தனக்கும் புத்திரர்கள் தேமே என்பதை எண்ணுமல் தன் உரிமை

மக்களாகிய துரியோதனுதியர் பக்கமே சார்ந்து பேச லுற்ருன். கண்ணிலியாகிய திருதராட்டிரன் சஞ்சய முனிவர் வருகையைச் சொல்லக்கேட்டு அவர் திருவடி களை வணங்கிக் கீழ் வருமாறு கூறத் தொடங்கினுன்.

"முனிவரே! நீர் குருகுலத்து அரசர்களுக்குரிய தொழில்களைக் கற்பிக்கும் குரு ஆவீர். கௌரவர் பாண்டவர் ஆகிய இரு பிரிவினரும் நீர் கூறும் கூற்றை என்றும் மறுத்துப் பேசுபவர் அல்லர். இவர்கள் இப்பொழுது ஒருவர்க்கொருவர் பகைமைகொண்டு பலபடி பேசிக் கொள்கின்றனர். இவர்கட்கு இடையே யுள்ள பிணக்கை நீர்தாம் போக்கவேண்டும். அவ் விரோத மனப்பான்மை ஒழிந்து கௌரவர்கள் இவ் வுலகை ஆளுதற்கான வழி வகைகளை நீர் செய்ய வேண்டும். நீர் நேரே பஞ்சபாண்டவர்கள் உறை விடம் சென்று, அவர்களை மீண்டும் காட்டகமே சென்று அருந்தவங்களைச் செய்து நற்கதி அடையும் படி பகரவும்" என்று சிறிதும் இரக்கம் இன்றிச் இசைத்தனன்.

சஞ்சய முனிவர் திருதராட்டிரன் கூறிய கூற் றினைச் சிறிதும் மறுத்திலர். அப்படியே சென்று திருத ராட்டிரன் எண்ணத்தை இயம்பி வருவதாகக் கூறிப் புறப்பட்டார். புறப்பட்டவர் பாண்டவர் இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார். வந்தவர் முனிவர் ஆதலின் அவரை நன்முறையில் வரவேற்றனர். பாண்

டவர் அவர் திருவடிகளில் தம் சென்னி பொருந்த வணங்கி எழுந்தனர். முனிவரும் அவர்கட்கு வாழ்த்துக் கூறி அமர்த்தினர். தாமும் நல்லதோர் ஆதனத்தில் அமர்ந்தனர். பின்னர்த் தாம் வந்த காரணமாகிய தூதுரையினை அறன் மைந்தன் உட்பட அனைவரும் கேட்கும் முறையில் உரைக்கலுற்றார்.

"பஞ்சபாண்டவர்களே! நீங்கள் நாட்டை ஆளும் நிலைமையை ஒழித்துக் காட்டிடமே உமக்கு உரிய இடமாகக்கொண்டு தவத்தை மேற்கொண்டீர். இச்செயல் உமக்குச் சீரிய செயலாகும். அறிவீனர்தாம் நிலையற்ற செல்வத்தை விரும்பி, அதனைச் சின்னாள் ஆண்டு அனுபவித்துப் பின்னர் ஆருத்துயரம் உற்றுத் துன்புறுவர். மேலும் கூறுவதைத் தரும கேள்: எத்தனையோ பிறவிகள் இருக்க, அப் பிறவிகளில் எல்லாம் புகாமல் மானிடப் பிறவியில் பிறந்து வாழ்தல் இனிது. இங்ஙனம் மானிடராய்ப் பிறந்தாலும் உலக மாயையை ஒழித்து ஞானிகளாய் விளங்குதல் அருமையுடைத்து. ஞானிகளாகி விளங்கிய பின்னர் வீட்டின்பம் கூறுதற்கான அறிவினைப் பெறுதல் அதனினும் அரிது. இந்த அருமைப்பாடுகள் அனைத்தையும் ஒன்றன்பின் ஒன்றாக நீ பெற்றுள்ளாய். உன் பங்காளியான துரியன் உமக்குரிய நாட்டை அவன் கூறிய வாக்குப்படி கொடுக்கவும் மாட்டான். அவன் உங்களோடு ஒற்றுமைகொண்டு

வாழவும் ஒருப்படான். உங்களோடு போரிடவே துணிந்துள்ளான். ஆகவே, நீயும் நின் இளைஞரும் உமக்குரிய தாயபாகத்தை மறந்திடுங்கள். பழையபடி தவமேற் கொள்ளுங்கள். இத்தவம் உங்களுக்கு என்றும் அழியாப் பேர் இன்ப உலகில் கொண்டு சேர்க்கும். துரியன் முதலியோர் துர் ஆசையுடையவர். சிறிதும் உள்ளத்தே அன்பில்லாதவர். என்ன கூறினும் கேளாத அசடர். உனக்கு யான் கூறுவது என்னை எனில், நீ மண்ணாசையை மறந்திடு. அரச பதவியில் ஆசை கொள்ளாதே போர் ஆசை உனக்குப் பொருத்தம் அற்றது. சீரும் சிறப்பும் பெறும் ஆசையையும் விட்டொழி. இவையே யான் உனக்குச் சொல்லக்கூடியவை'' என்று கூறினர்.

இங்ஙனம் சஞ்சய முனிவர் கூறக்கேட்ட சினம் கொள்ளாத தருமரும் சிறிது சினங்கொண்டனர். தாம் சினங்கொண்ட குறிப்பைச் சில மொழிகள் பேசியும், வெளிப்படுத்தினர். முனிவரை நோக்கி "முனி சிரேஷ்டரே, அரசர்கள் தம் அரசகடனை ஆற்றாது அடவி புகுந்து அருந்தவம் புரியும் கடமை கடமையாமோ ? அரசபதவியில் வாழ்வாங்கு வாழ்ந்த பின்பன்றோ காடு புகுந்து கடுந்தவம் புரிந்து கடவுளடி பற்றுதல் வேண்டும் ? அரசர்கள் தம் பகைவரை ஒழித்து நாட்டில் அமைதியினை நிலை நிறுத்திய பின்பே தாம் நல்வழி நாடுதற்கான அறங்களைச் செய்ய

வேண்டும்" என்று கழறினர். தருமரே இப்படிப் பேசத் தொடங்கினல் அவர்பின் தோன்றல்களான வீம அர்ச்சுன நகுல சகாதேவர்கள் பேசுதற்குச் சொல்ல வேண்டுமா?

வீமன், முனிவரை நோக்கினன். முனிவரை நோக்கும்போதே அவன் கண்கள் சிவந்தன. தீப்பொறி பறப்பனபோல் சில மொழிகளைப் பகரலானன். அப்போது அவன் விண்ட மொழிகள் உறுமேரு இடிப்பன போன்றிருந்தன. அவன் முனிவரை நோக்கி, முனிவரே, நீர் எங்கட்குப் பிரம்ம குருஆவீர். அப்படி இருக்க, நீர் எம் பகைவராகிய கௌரவர் சார்பில் பேசுதல் உமக்கு அடுக்குமோ? அத் துரியோதனுதியர்தாம் நாங்கள் அனுப்பிய உலூகமா முனிவரிடம் போருக்குத் தாம் தயாராக இருப்பதாகக் கூறி அனுப்பியுள்ளாரே. எம்மூத்த தந்தையார் உம்முடம் கூறியனுப்பியவை தக்கவை அல்ல. அவர் தம் மக்களையும் எம்மையும் ஒரு படித்தாகக் காண வேண்டும். நம் முகத்தில் வலப்பக்கம் ஒரு கண்ணும் இடப்பக்கம் மற்றொரு கண்ணும் இருந்தால் இவற்றிற்குள் உயர்வு தாழ்வு கருதலாமோ? இவற்றினிடத்தில் வேற்றுமையைக் காணலாமோ? அப்படி வேற்றுமை காண்பதுபோல அன்றோ இருக்கிறது திருதராட்டிரருடைய கருத்துரை? போர் முனையில் என் கதை கொண்டு மோதும் திறத்தை நீரே உம் கண்

கொண்டு காணுங்கள். எம்போன்ற சுத்த வீரர்கட்கு நீர் கூறும் தவம் தவமாகாது.

உவந்து நீமொழி தவம் அருந்தவம்
அல்லஒன்னலர் உடலுகும்
சிவந்த சோரியின் மூழ்கி மாழ்கு
சிரங்கள் போய்நட மாடுமக்
கவந்த கானகம் மேவி யூடுறு
தீய வெவ்வினை களைவதே
தவம்த னில்தலை யான வீடுறு
தவம் எமக்கிது சாலுமே

அதாவது " முனிவரே, நீர் மொழிந்திடும் தவம் அருந்தவம் அன்று. பகைவர் உடல் போரில் வெட்டுண்டு செந்நீரில் மூழ்கி, தலைகளும், தலையற்ற முண்டங்களும் பொருந்திய போர்க்களத்தில் இடையே ஊடுறுவிக் கிடக்கும் தீய வெவ்வினைகளை ஒழிப்பதே எம் போன்ற வீரர்க்கு வீர சுவர்க்கம் புகுதற்குரிய தவமாகும். ஆகவே, போர்க்களமாகிய யாக சாலையில் துரியன் முதலான யாக பசுக்களைப் பலியிட்டு, களவேள்வி செய்ய எண்ணியுள்ளேன் " என்று தன் வீரம் தோன்ற விளம்பினான். இன்னமும் மேலே பேசத் தொடங்குவானோ என்ற எண்ணத்தால் கிருட்டினன் வாயு புத்திரனை வீமனை அமைதியுறுமாறு கூறி, பின் சஞ்சய முனிவரைப் பார்த்து, " முனிவரே

இவ்விரு பகைவர் கூட்டத்திற்கு இடையே நாம் இருந்து யாது பயன்? இப் பஞ்சபாண்டவர் இத் தரணியினை ஆளுதல் தவம் என்றும் கௌரவர்கள் விண்ணுலகம் புகுதல் தவம் என்றும் கருதுகின்றனர். ஆகவே, நீர் மீண்டு சென்று துரியனுதியர்கட்குப் பாண்டவர் கருத்தைப் பகர்ந்திடுவீராக" என்று மொழிந்தனன்.

சஞ்சய முனிவர் அதற்குமேல் ஒன்றும் பேசிற்றிலர். கண்ணன் கழறியபடியே அத்தினபுரம் நோக்கிப் புறப்பட்டனர். துரியனையும் திருதராட்டிரனையும் கண்டு தருமர் கூறிய கூற்றையும் கண்ணன் கழறிய மாற்றங்களையும் வீமன் மொழிந்த வீர மொழிகளையும் ஒன்றையும் விடாது உரைத்திட்டார்.

— : —

# 8. கண்ணன்

தருமர் முதலிய ஐவர் பஞ்சபாண்டவர் என்றும் சூரியன் முதலிய நூற்றுவர் கௌரவர் என்றும் கூறப் படுவர் என்பது. நீங்கள் அறிந்ததுதானே? இவர்கள் ஒருவர்க் கொருவர் பங்காளிகளாயினும் பகைவர் களாகவே இருந்தனர். இப்பகைமை கௌரவரிடத்தி லிருந்து எழுந்ததே அன்றிப் பாண்டவரிடத்திலிருந்து பிறந்ததன்று.

தருமர் சூழ்வலி காரணமாகத் சூரியனுடன் பந்தய மிட்டுச் சூது ஆடித் தமக்குரிய சொத்துச் சுதந்தரங்களைத் தோற்றனர். இங்ஙனம் தோற்ற வற்றை மீண்டும்பெற வேண்டிஞல், பாண்டவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் காட்டில் வாழ்ந்து பதின் மூன்ருவது ஆண்டு தாம் இருக்கும் இடம் இன்னது என்பது எவரும் அறியாத நிலையில் தம் உருவினை மறைத்து வாழ்ந்து நாட்டிடை வந்தால் இழந்த உரிமைகளை ஈவதாகத் சூரியன் கூறி யிருந்தனன். அங்ஙனமே பாண்டவர் ஐவரும் பன்னிரண் டாண்டுகள் அடவியில் இருந்துவிட்டு, ஓர் ஆண்டு விராடபுரத்தில், அந் நகரத்து மன்னனும் அறியாத நிலையில் தம்மை வெளிப்படுத்தாது இருந்தும் தம்

உரிமை பெறத் துரியனிடம் தூதாகக் கண்ணனை அனுப்புவதென ஐவரும் முடிவு செய்தனர். அவ்வாறே கிருட்டிஹனும் துரியன்பால் தூது செல்லப் புறப் பட்டனன்.

கண்ணன் துரியோதனுதியர்பால் தூது போவ தற்கு முன், தருமர் தம்பிமார்களுடன் கிருட்டினனையும் உடன் வைத்து ஓர் ஆலோசனைக் கூட்டம் நடத்தினர். அதுபோது, கிருட்டினன் அக் கூட்டத்தின் தலைவனுக இருந்து ஐவருடைய கருத்துக்களையும் கூறுமாறு கேட்டான். அவ்வாறே ஒவ்வொருவரும் தம் தம் கருத்துக்களைக் கூறத் தொடங்கினர்.

" கண்ணு! துரியனுதியர் போர் வேண்டும் என்று சஞ்சய முனிவரிடம் கூறி அனுப்பிஞலும், நாம் அரசநீதி தவறி உடனே போருக்கு ஆயத்தம் ஆதல் கூடாது. இது மன்னர் கடமையாகாது. பகை என்னும் நெருப்பை மிகவும் மூட்டி, வளர்த்தால் அமரில் இரு பக்கத்தினரும் இறக்கவே நேரிடும். ஒரே குளத்தில் தாமரை மலரும், கழுநீர் மலரும் வளர்ந்து, பூத்து விளங்குவதுபோல, கௌரவ பாண்டவர்க ளாகிய எங்கள் இருவர் குலமும் ஒருசேர ஒற்றுமை யாக வாழ்வு நடத்துவதேமுறை. ஆகவே, அரவக்கொடி யோனிடம் சமாதான மொழிகளே சாற்றி வருக. துரோணர் முதலிய ஆசிரியர்களையும், வீடுமர் முதலிய பெரியோர்களையும் மற்றும் துணைவர்களாக உள்ள

துரியோதனாதியரையும் போரில் வென்று இவ்வுலகை ஆளுவதைவிட முன்போலக் காட்டில் இரவும் பகலும், கந்த மூலங்களை உண்டு வாழ்வதே நல்லது. இனிதும் ஆகும் '' என்று தருமர் கூறினர்.

கண்ணன், '' தருமா! நீ போருக்குப் பயந்து மீண்டும் காடு நோக்கிச் சென்றால் உன்னையும் உன்னைச் சார்ந்தவர்களையும் பூலோகத்தினர் இழித்துப் பேச மாட்டார்களோ? நீங்கள் முன்னர் அரச சபையில் மொழிந்த சபதங்களை எப்படி நிறைவேற்றுவீர்?'' என்று தூண்டினன். இப்படிப் பரந்தாமன் பகர்ந்ததைக் கேட்ட பொறுமைக் குணைத்தவராம் முரசக் கொடியோர் '' கிருட்டிணா! நீ கூறுவதும் முறையே ஆகும். ஆகையால், நீ கௌரவர்பால் தூது சென்று எமக்குக் கொடுத்து விடுவதாகக் கூறிய நாட்டைக் கேள். நாடுதர மறுத்தால் ஐந்து சிற்றூர்களையாகிலும் கொடுக்குமாறு கேள். அவற்றையும் கொடுக்க மறுத்தால் நாங்கள் தனித்தனி வாழ ஐந்து வீடுகளையாகிலும் தருமாறு வேண்டு. இவற்றையும் அவன் தர எண்ணம் கொள்ளவில்லையென்றால், போர் வேண்டு'' என்று கூறிவிட்டனர். இவ்வாறு அறத்தின் வடிவமான தருமர் கூறக்கேட்ட வீமனுக்கு ஆத்திரம் மிகவும் பொங்கி எழுந்தது. '' கண்ணா, என் அண்ணா இப்படிக் கெஞ்சிக் கேட்குமாறு கூறுகின்றாரே. இன்னமும் பகைவனை ஒழிக்காமல் இருக்க எண்ணுகிறார். அரச

சபையில் ஏற்பட்ட அவமானத்தைப் போக்கிக் கொள்ள வேண்டாவா?'' என்று கூறிவிட்டு, தன் அண்ணாவாகிய தருமரைப் பார்த்து, "அண்ணா! நம்மைக் காட்டுக்கு அனுப்பிய துரியனையும் அவனைச் சார்ந்தவரையும் கொன்று உன்னை அரியாசனத்தில் வைக்கின்றேன். அவ்வரவு உயர்த்தவனையும் மேலுலகு சென்று அரசாளுமாறு செய்கின்றேன். இனித் தூதுவரை அனுப்பவேண்டா. முன்னர் நாம் ஊலூகரைத் தூது விடுத்ததுசாலும்.'' என்று சினத்துடன் மொழிந்தான்.

தருமர் மிகவும் பொறுமையுடையவர் அல்லரோ? வீமனுடைய வீர மொழிகளைக் கேட்டு, அவனை அமரச் செய்து, "தம்பி, வீமா, குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை. ஒரு குலத்தில் பிறந்த நாம் ஒற்றுமையுடன் வாழவே, வழிகாணவேண்டும். சாமபேததான தண்டம் என்ற முறை வைப்பில் போர் ஈற்றில் தானே பொருந்தி இருக்கிறது?'' என்று தணிவு தோன்றச் சாற்றினார்.

இவ்வாறு தன் தமையனார் சொல்லக்கேட்ட வாயு புத்திரன், "அண்ணா! உம் விருப்பப்படி மீண்டும் தூது அனுப்புவோம். அப்படித் தூதுவர் ஒருவரை அனுப்புவதாயின், என் எண்ணமும், பாஞ்சாலி எண்ணமும் நிறைவேற என்னைத் துரியன்பால் தூது விடுக. கிருட்டினன் தூதனாகப் போகவேண்டா'' என்று

வேண்டினன. மாயோன் வீமனுடைய வார்த்தைகளைக் கேட்டு, "வீமா! முன் பிறந்தவர் அரச முறையினை உரைத்தால் அதனைக் கேளாது நம்விருப்படி நடப்பது முறை அன்று. பொறு." என்று கூறி அர்ச்சுனனை அவனது கருத்தைக் கழறுமாறு கூறினன்.

அர்ச்சுனன் தருமரையும், மணிவண்ணனையும் வணங்கி, "நாம் பொறுத்த பொறுமைகள் போதாவா? இன்னமும் அறத்தைப் பற்றி அறைந்து கொண்டிருந்தால் யாது பயன்? எப்போது நம் பகைவனை ஒழிப்பது? திரௌபதையின் கூந்தல் எப்போது முடிக்கப்படுவது? யான் தேவர்களையும் வெல்லக்கூடிய அம்புகளைக் கொண்டிருந்து யாதுபயன்? நமக்கு ஏற்பட்டுள்ள மாசு தீரவேண்டாவா? இந்தக் கண்ணன் சென்றாலும் சரியே, பொறுமைக் கிடமான தருமர் கூறி யனுப்பும் கூற்றுக்களை மொழிந்தாலும் அந்த மதியற்ற மன்னனும் துரியன் கேளான். கெடுமதி கண்ணுக்குத் தோன்றுமா? உவர் நிலத்தில் ஏதேனும் விளைவு உண்டாகுமா? பாம்புக்குப்பால் கொடுத்தாலும் விடம் ஒழிய வேறு ஒன்றையும் தாராதன்றோ?" என்று பார்த்தன் பகர்ந்து அமைந்தான். பின்னர் நகுலனைத் தன் எண்ணம் இன்னது என்பதை அறிவிக்குமாறு கேட்க, அவனும் அர்ச்சுனன் உரைத்தவாறே, "கண்ணா துரியன் நாடு கொடுக்கமாட்டான். நம்மை நாட்டவர் இகழா வண்ணம் போரிடலே தக்கது. தான்

அறியாதவன் பிறர் போய் அறிவித்தாலும் உணர மாட்டான்.'' என்று கூறினன். இறுதியாகச் சகாதேவனை நோக்கி “ உன் கருத்து யாது?'' என்று கேட்க அவன் பேரறிஞன் ஆதலின்.

“ சிந்தித்தபடி நீயும் சென்றுல்என்
ஒழிந்தால்என் செறிந்த நூறு
மைந்தர்க்குள் முதல்வன்நிலம் வழங்காமல்
இருந்தால்என் வழங்கி னுல்என்
கொந்துற்ற குழல்இவள் முடித்தால்என்
விரித்தால்என் குறித்த செய்கை
அந்தத்தில் முடியும்வகை அடியேற்குத்
தெரியுமதோ ஆதி மூர்த்தி ”

என்று கூறி, “ கண்ணு, உன் திருவுள்ளத்துக் கருத்து எதுவோ, அதுவே எனக்குக் கருத்தாகும்.'' என்று கூறிவிட்டனன். இந்த வேளையில் திரௌபதி இடையில் எழுந்து “ மாயோனை நோக்கி, “ பரந்தாமா, சமாதானம், சமாதானம் என்று கூறிக்கொண்டிருந்தால் எனக்குக் குற்றம் வருமாறு செய்த துட்டர்களைத் தண்டிப்பது எப்படி ? நான் விரித்த கூந்தலை முடிப்பது எப்போது ?'' என்று அழுது கூறினள்.

இவ்வண்ணம் பாஞ்சாலி பகரக்கேட்ட பரந்தாமன், “ மாதே, மனம் மாழ்கேல். பாண்டவர்கள் பொருட்டுக் கௌரவர்பால் தூது சென்று மீண்டதன் பின் உன் கூந்தலை நானே முடிக்கின்றேன் '' என்று

கூறி அவனைச் சாந்தப்படுத்தினன். பிறகு தான் தூது போவதாகச் சம்மதித்தனன்.

மாயோன் பொன்மயமான தேர்மீது இவர்ந்து, முரசு ஒலிக்க, சங்கம் முழங்க, தாரைகள் சப்திக்க வெண்குடை நிழலில் தங்கி இருபுறமும் சாமரைகள் இரட்டப் புறப்பட்டனன், புறப்பட்டவன் இடையில் மலைகளையும், பாலைவனங்களையும், காட்டாறுகளையும், நஞ்செய் புன்செய் நிலங்களையும் இரண்டு நாட்களில் கடந்து, மாட மாளிகைகள் கூடகோபுரங்கள் நீண்ட மதில்கள் சூழ்ந்த அத்தினபுரத்தை அடைந்தான்.

அத்தினபுரம் நீர்வளம் நிலவளம் கொண்டது நீர்த்தடங்கள் யாவும் செந்தாமரை மலர்கள் மலர்ந்து, திருமாலாகிய கண்ணனை ஆலத்திகொண்டு வர வேற்பனபோல வரவேற்றன. இந்நிலையில் திருமகள் கேள்வன் ஒரு சோலையிடத்து வந்து தங்கினன், இவனது வருகையைத் தூதுவர் துரியனுக்கு அறிவித்தனர். இங்ஙனம் அறிவிக்கக் கேட்ட துரியன், கண்ணனை வரவேற்க நாட்டினை அலங்கரிக்குமாறு ஆணையிட்டுத் தானும் புறப்பட்டனன். சகுனி துரியனை அவ்வாறு செய்ய ஒட்டாமல் தகைந்தனன்.

மாயவனது வருகையை அறிந்த வீடுமர், துரோணர், அசுவத்தாமர், விதுரர், கிருபர் முதலியோர் எதிர்கொள்ளச் சென்றனர். தன்னை வரவேற்க வந்தவர்களோடு சிறிது நேரம் அளவளாவிப் பின் பைந்துழாய்

முடிப்பரமன் விதுரர் மாளிகைக்குச் சென்றனன். நெடுமாலாம் மாயோன் வேறு எவர் வீட்டிற்கும் செல்லாது தம் இல்லத்திற்கு வந்துற்றமையின் பொருட்டுப் பெருமகிழ்வு கொண்டனர் விதுரர். அம் மகிழ்வு காரணமாகக் கண்ணனை நோக்கி, "கண்ணா, எனது சிறு குடிசையினை என்னென்று கருதினாய்? நீ முன்னே உறங்கி யருளிய பாற்கடல் என்று நினைத்தனையோ? அல்லது உனது படுக்கையாகிய பாம்பணை என்று நினைத்தனையோ! அன்றி ஊழிக் காலத்தில் உறக்கங் கொள்ளும் ஆல இலை என்று எண்ணினையோ? நால் வகை வேதங்கட்கு உறைவிடம் என்று உணர்ந் தனையோ? நீ என் குடிசையில் எழுந்தருளியதற்கு என் இல்லம் பெரிய தவம் செய்திருக்க வேண்டுமென்ற கருத்தில்,

"முன்ன மேதுயின் றருளிய முதுபயோ ததியோ
பன்ன காதிபப் பாயலோ பச்சைஆ லிலையோ
சொன்ன நால்வகைச் சுருதியோ கருதிநீ எய்தற்கு
என்ன மாதவம் செய்தது இச் சிறுகுடில்" என்றார்

இம் முறையில் உபசார மொழிகள் கூறப்பட்டு விருந்துணவும் கண்ணனுக்குப் படைக்கப்பட்டது. அன்று இரவு மாயோன் தான் வந்த சிரமம் நீங்க நன்கு உறங்கி மறுநாள் துரியன் அரச சபைக்குப் புறப்பட்டனன்.

முகில் வண்ணன் துரியன் சபையினை அணுகிய போது, துரியனைத் தவிர்த்து மற்றவர்கள் வந்து வணங்கி வரவேற்றனர், தனக்கென அமைந்த தவிசில் கண்ணன் அமர்ந்தனன். உடனே அரவக் கொடியோன், அமலநாதி பிரானை நோக்கி, "எம்மூர் புகுந்தும் நேரே எம் மாளிகை புகாது விதுரர் இல்லம் சென்றது முறையோ ?" என்று உசாவினன். மாயையில் வல்ல மாயோன் ஆதலின், உடனே கண்ணன் " மன்னு ! எனக்கு என் வீடு என்றும் பிறர் வீடு என்றும் வேறுபாடு கிடையாது. என்றாலும், விதுரர்தாம் அன்புடன் தம் இல்லம் வருமாறு வேண்டினர். பிறர் எவரும் அழைத்திலர். ஆகவே, அவர் மாளிகைக்குச் சென்றனன். மேலும், நான் உன் மாளிகையில் வந்து தங்காமைக்கு ஒரு காரணம் இருக்கிறது. அதாவது உனது பங்காளிகளால் ஏவப்பட்ட தூதனாகிய யான், உன் இல்லத்தில் தங்கி உன் உணவினை உண்டு, உன் கருத்துக்கு மாருக நான் பேச நேர்ந்தால் அது ஒழுங்காகாதே. மேலும், அமைச்சராக இருந்து அரசை அழித்தாலும், பெரியோர் வார்த்தைகளைத் தட்டி நடந்தாலும். பிறர் செய்த நன்றியை மறந்தாலும் ஒருவர் இல்லத்தில் உண்டு பின் அவரோடு போர் தொடுக்க எண்ணினாலும் சந்திர சூரியர்கள் உள்ள வரையில் நரகத்தில் ஆழ்வர்."

அரவம் மல்கிய தொகை யாய்மதி
அமைச்ச ராய்அரசு அழிப்பினும்

குரவர் நல்உரை மறுக்கி னும்பிறர்
புரிந்த நன்றியது கொல்லினும்
ஒருவர் வாழ்மனையில் உண்டுபின் னும்அவர்
உடன் அழன் றுபொர உன்னினும்
இரவி உள்ளளவும் மதியம் உள்ளளவும்
இவர்களே நரகில் எய்துவார்

என்று கூறக் கேட்ட துரியன் வேறு ஒன்றுட தொடர்ந்து வினவாமல் வந்தகாரணத்தைக் கூறுமாறு வினவினன். கண்ணனும் " துரிய! உனது துணைவர் சூதினால் அரசை இழந்தனர். பின் நீ சொன்ன சொற்படி, காட்டிடைக் கடக்கவேண்டிய நாட்களையும் கழித்து மீண்டும் வந்து சேர்ந்தனர். ஆகவே, அவர்கள் உரிமையினை உன்னைக் கேட்டுப்பெற யான் பாண்டவர் பொருட்டுத் தூதுவனாக வந்தனன். நீ உன் துணைவரை அழைத்து அவர்கட்கு நாடுகளைத் தந்து அவர்களோடு பொருந்த வாழ்க. இவ்வாறு செய்தால் உன்னை வாய்மை யுடையவன் என்று அரசர் புகழ்வர். இவ்வாறு செய்திலை எனில் உனக்கு அறமும் ஆண்மையும் புகழும் ஏற்படா " என்று இயம்பினன். இங்ஙனம் புகலக் கேட்ட இராச ராசன் சீற்றங்கொண்டு, " அவர்கள் இன்னும் காட்டில் திரிவதே முறை. நீ வெறுத்தாலும் சரி. இங்குள்ள மன்னர் திகைப் புற்றாலும் சரி, பலப்பல எண்ணினாலும் சரி. பின்னால் என்னைப்பற்றி எள்ளி நகையாடினாலும் சரி. நான்

கூறிய வார்த்தையினைத் தவறினேன் என்று தேவர்கள் புகன்றாலும் சரி. என்னோடு எதிர்த்து அப் பஞ்சவர் போர் தொடுத்தாலும் சரி. ஈ அமரும் இடம்கூட அவர்களுக்குக் கொடுக்க மாட்டேன்'' என்று சிறிதும் இரக்கம் இன்றி இயம்பினன்.

கண்ணன் இந்தவாறான சினம் மிக்க வார்த்தைகளைக் கேட்டு, "மன்னா, நாடு முழுமையினையும் கொடுக்க மனம் இல்லையாயின், பாதி நாட்டினையேனும் தருதி.'' என்றனன். அதனையும் தர மறுத்தனன் துரியன். கண்ணன் மீண்டும் "ஐவர்களும் தனித்தனி வாழ ஐந்து ஊர்களையேனும் வழங்குக'' என்று இரந்தனன். இவ்வளவு கெஞ்சிக் கேட்டும் ஒரு வீடுகூட அளிக்க மறுத்தனன் துரியன்.

மாயன் மேலும் துரியனை நோக்கி, "துரிய, வீடுமர் தம் தந்தையின் பொருட்டு, தம் வாழ்வையும், அரசினையும் துறந்து உன்னுடனே வாழ்ந்து வருகின்றார். அதனை எண்ணியேனும் நீதி முறையினை எண்ணியேனும் உன் துணைவர்கட்கு ஐந்து ஊர்கூட நீ கொடுக்க மறுத்தால், உனது அரசியலை என்னென்று உரைப்பது! ஒரே குலத்தில் இரண்டு மன்னர் உடன் பிறந்து அரச உரிமை பெற்றால், இருவரும் ஒத்து வாழ்தல் முறையாகும். அப்படி இருக்க, குரு குலத்தவராகிய நீங்கள் இருவரும் ஒத்து வாழாதது பெருங்குறையாகும்,'' என்று எடுத்து மொழிந்தனன்.

இவ் வார்த்தைகளைக் கேட்ட துரியன் "கண்ணா! நாட்டை எளிதில் பெறலாம் என்று எண்ணி வந்தனையோ? நாடு வீரர்களுக்கு உரியதன்றி வேறு எவர்க்கும் உரியதன்று." என்று கூற, உடனே கண்ணன் இதுதான் சமயம் என்று "மன்னர் மன்னா, இவ்வாறு ஆண்மையோடு பாண்டவருடன் போரிட எண்ண மிருக்குமானால் கைபோட்டுத் தருக" என்று கேட்டனன்.

இவ்வாறு கூறக் கேட்ட துரியனுக்கு அடக்க ஒண்ணாத சினம் பொங்கியது. "காட்டில் காளை மாடுகளையும் கன்று காலிகளையும் மேய்க்கும் இடையனாகிய நீயா, என் குருகுலத்து வாய்மை அறியாது இந்த வார்த்தையினை இச் சபையில் மொழிந்தாய்? யானைகள் எதிர்த்தால் சிங்கங்கள் அஞ்சுமோ? அதுபோலப் பாண்டவர் என்னைப் பகைத்துப் போரிட்டால் அதற்கு அஞ்சி யான் பின் அடைவனோ? நா ஒன்றா? இரண்டா? அப்படி இருக்க, யான் கை அறைந்து கொடுக்க வேண்டுமா? பஞ்சபாண்டவர்கள் தம்மை வீரர் என்று கூறிக் கொள்ளத் தகுதியுடையரோ? அவர்களின் இல்லாள் ராச சபையில் துகில் உரியப் பட்டபோது பார்த்துக் கொண்டிருந்தவர்கள்தாமோ வீரர்?" என்று இழிவாக மொழிந்தனன்.

இங்ஙனம் துரியன் மொழிந்த மொழியின் கருத்தைக் கண்ணன் உணர்ந்து, பாம்புக் கொடி

யோன் போரினுக்கு ஆயத்தமாக இருக்கின்றனன் என்று முடிவு செய்துகொண்டு, இராச சபையினை விட்டுத் விதுரர் வீடுவந்து சேர்ந்தனன். அதன்பின் கண்ணன் குந்தி தேவி இருந்த இடத்தை அடைந்தனன். அவளும் தன் மைந்தரை எதிர் கண்டார் போல் மனமகிழ்ந்து நல்ல முறையில் வரவேற்ருள். கண்ணன் பாண்டவர் பொருட்டுத் துரியனிடம் தூதுபோந்தும், நாடுபெற வழி இன்றிப் போர் தொடுத்துப் பெறவே வழி ஏற்பட்டது என்பதை எடுத்துக் கூறிப் பின்குந்தியை நோக்கி, " அத்தையே, நீ நேரே கன்னனிடம்போய், நான்தான் உன்னைப் பெற்றதாய் என்பதை எடுத்துச் சொல்லுக" என்று கூறி, குந்தி எப்படிக் கன்னனுக்குத் தாயாவாள் என்ற வரலாறுகளையும் சொல்லி அனுப்பினுன். அத்துடன், கன்னனிடம் தான் தாய் என்பதை நிலை நிறுத்திய பின், அவன் வளர்த்து வரும் நாகாத்திரத்தினை ஒரு முறைக்குமேல் மறுமுறை அர்ச்சுனன் மீது விடாதிருக்குமாறு வற்புறுத்திக் கூறி வரும்படியும் சொல்லி அனுப்பினுன்.

இதற்கிடையில் துரியனுக்கும் அவனைச் சார்ந்த சதிகாரருக்கும் " கண்ணன் தனிந்து வந்துள்ளான்- இவனது சகாயம் பாண்டவர்க்கு மிகுதியும் உண்டு. ஆகவே, இவனை என்செய்வது ?" என்று சிந்தனை செய்கையில், துரியன் தந்தை திருதராட்டிரன், அவனைக்

கொல்வதே முடிந்த முடிபு.'' என்று மொழிந்தனன்-நீதிமுறை அறிந்த விகர்னன்,

" மூத்தவர் இளையோர் வேதமுனிவரர்
பிணியின் மிக்கோர்
தோத்திரம் மொழிவோர் மாதர்
தூதர்என் றிவரைக் கொல்லின்
பார்த்திபர் தமக்கு வேறு பாவமற்
றிதனின் இல்லை
பூத்தெரி தொடையாய் பின்னும்
நரகினும் புகுவர் '' என்றான்.

இவ்வாறு விகர்னன் கூறக்கேட்ட சதிகாரர்கள் இறுதியில் " தூதனைக் கொல்லவது முறை அன்று. ஆனால், சிறைப்படுத்தல் ஒழுங்கு '' என்ற முடிவு செய்து, அதன்பொருட்டு நில அறை ஒன்று அமைத்து அதன்மீது விரிப்பு விரித்துக் கீழே நில அறை உண்டென்று அறியாவாறு செய்து, மேலே தவிசு இட்டுக் கண்ணனை அதன்மீது அமரச்செய்து, அங்ஙனம் அமர்ந்ததும் அத் தவிசு நில அறையில் புகுமாறு செய்து அங்கு முன்பே இருக்கவைத்த மல்லரைக் கொண்டு மாயனைப் பிணித்து விலங்கிட்டுச் சிறை செய்தல், என்று முடிவு கட்டினர். மீண்டும் கண்ணனை வந்தபோது அப்பொய்த் தவசில் அமருமாறு கூறினர். எல்லாம் அறிந்த கண்ணன் அத்

தவசில் சார்ந்ததும் அது முறிந்தது. உடனே கண்ணன் பேருருவம் கொண்டு நின்றான். தன் காலாலும் கையாலும் மல்லர்களை மிதித்துச் சாடினன். கண்ணனின் தோற்றமும் சீற்றமும் கண்டவர்,

**மாதவனே முனியேல் எமை**
**ஆளுடை வானவனே முனியேல்**
**யாதவனே முனியேல் இதயத்தில்**
**இருப்பவனே முனியேல்**
**ஆதவனே முனியேல் மதிவெம்கனல்**
**ஆனவனே முனியேல்**
**நீதவனே முனியேல் முனியேல்என**
**நின்று பணிந்தனரே**

அதன்பின் கண்ணன் தன் சீற்றம் தணிந்து இயற்கை உருக்கொண்டனன். சூரியனை நோக்கி "சூரியா உன், மதி கேட்டினால் என்னையா கொல்ல முயன்றனை? உன்னையும் உன்னைச் சார்ந்தவரையும் கொன்று போடுகிறேன். விரைவில் காண்டி" என்றுகூறி இந்திரனை அழைத்துக் கன்னனிடம் சென்று, அவனுடன் தோன்றிய கவசகுண்டலங்களை வேண்டிப் பெருமாறு பணித்துப் பாண்டவர் உறையும் நகரை அடைந்தான். அங்ஙனம் அடைந்தவன் தருமரிடம், தான் தூது சென்று கூறியதையும், அவன் மறுத்துப் போரிட ஆயத்தமாய் இருப்பதையும், விதுரன் வில்லை முறித்த

தையும் இரவுப்போது சூரியன் தன் உயிரைப் போக்க முயன்றதையும் இந்திரன் கன்னனிட மிருந்து கவச குண்டலங்களைப் பெற்றதையும் குந்தி கன்ன னிடம் வரங்கள் பெற்று வந்ததையும் ஒன்று விடாமல் மொழிந்தனன்.

# 9. நளன்

விதர்ப்ப தேசத்து மன்னன் வீமராசன் என்பவன். இந்த விதர்ப்ப தேச மன்னனும் வீமராசனுக்கு சிறந்த அழகு மிக்க பெண் ஒருத்தி இருந்தனள். அவளே தமயந்தி என்னும் தையலாவாள், அவளது அழகு காரணமாகத் தேவர்களுள் இந்திரன் இயமன், அக்கினி, வருணன், ஆகிய நால்வரும் மணந்து கொள்ள பெரு விருப்பம் கொண்டிருந்தனர். என்றாலும், தமயந்திக்கு மட்டும் நிடதேசத்து மன்னனும் நளனிடத்தில் தன் உள்ளத்தைப் பறிகொடுத்து அவனையே மணப்பது என்ற உறுதி நிலைத்திருந்தது. தமயந்தி பேர் எழில் வாய்ந்தவள் என்று முன்னர்க் குறிப்பிட்டோமல்லவா? அப்படியாயின் அவளை மண்ணவர்களும் மணக்க விரும்பினர் என்று கூறவும் வேண்டுமோ? ஆகவே, அவளைக் கடிமணம் புரியப் போட்டி மிகுந்துதான் இருந்தது. இதனை அறிந்த வீமராசன் இந்த வம்பு தனக்கு ஏன் என்று அரச முறைப்படி சுயம்வரம் என்ற ஒன்றை ஏற்படுத்தி அதற்கு எல்லா மன்னரையும் மற்றுளாரையும் மண ஓலைபோக்கி வரவழைத்துக் கூட்டி அப்போது எவர்க்கு தன் மகள் மணமாலை சூட்டுகின்றாளோ

அவனுக்கே அவளை மணம் முடித்து வைப்பது என்ற முடிவுக்கு வந்தனன். அதற்கு ஆவன செய்து சுயம்வர நாளைக் குறிப்பிட்டு அவரவர்கட்கு மண ஓலையினையும் விடுத்தனன்.

வீமராசனால் விடுக்கப்பட்ட தூதுவர் நிடத தேசத்து மன்னனும் நளமகா ராசனிடம் தமயந்தியின் சுயம் வரங் குறித்த மண ஓலையுடன் வந்து சேர்ந்தனர். தமயந்தியின் சுயம்வர ஓலையினை நீட்டினர். அதனை யேற்ற நளன் உள்ளம் உவந்து வாசித்து உடனே விதர்ப்ப தேசம் புறப்பட ஆயத்தமானான். நன்கு அலங்கரிக்கப்பட்ட தேரின்மீது இவர்ந்து விதர்ப்பத் தேசம் நோக்கிப் புறப்பட்டான்.

நளன் தமயந்தியின் சுயம் வரத்திற்குப் புறப்பட்டதுபோலவே, வானவர்கள் நால்வரும் புறப்பட்டனர். இடை வழியில் அத் தேவர்கள் நளனைக் கண்டனர். நளனது அழகினை உற்று நோக்கிய இந்திரன் "நான் உடம்பெல்லாம் ஆயிரம் கண்களைப் பெற்றதன் பயனை இன்றுதான் பெற்றேன். இந்த ஆயிரங்கண்களாலும் நளனது அழகைக் கண்டு இன்புற்றேன்" என்றனன்.

வருணனும் நளனது அழகை வியந்து கூறத் தொடங்கினான். "ஆ இவ்வளவு எழில் நலம் படைத்த இந் நளனைத் தவிர்த்து அம் மடந்தையாம் தமயந்தி

எப்படி மற்ருெருவருக்கு மணமாலை சூட்டுவாள்? அது சந்தேகம்தான்'' என்று கூறிவிட்டனன்.

அக்கினியும் தன் கருத்தினை அறையலுற்றனன். "இவ்வளவு கவினுடைய காளையாம் நளனுக்கு அக் காரிகை மணமாலை சூட்டிலள் எனில், அவள் அழகு பெற்றிருந்தும் பயனில்லை'' என்று பகிரங்கமாகப் பகர்ந்து விட்டனன். இயமன் "சுயம்வரத்திற்குப் போவதில் பயனே இல்லை. நளனுக்கே அந்நங்கை மாலை சூட்டுவாள். ஆகவே, நாம் திரும்பிப் போவதே அறிவுடைமை,'' என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறிவிட்டனன். இவ்வாறு இந்திரன், வருணன், அக்கினி, இயமன், ஆகிய நால்வரும் நளனது அழகை வியந்து போற்றினர். தமயந்தியின் உளத்தையும் அறிந்து கூறினர்.

இவ்வாறு தம் தம் உள்ளக் கிடக்கையினை ஒளியாது உணர்த்திட்ட நான்கு தேவரும் நளனை அணுகினர், இந்திரன், நளனை நோக்கி, "நள மகா ராசனே! உன் வரவு நல்வரவாகுக. நாங்கள் நல்ல வேலையில் புறப்பட்டதன் காரணத்தால் உன்னை வழியில் கண்டனம். இவன் அக்கினிக்கடவுள். இவன் தென்திசைக் கூற்றுவன். இவன் கடற் கடவுள். யானே தேவர்கள் தலைவனுன தேவேந்திரன் ஆவேன். யாங்கள் நால்வரும் உன்னை ஒன்று வேண்டப் போகிருேம். அதனைப் பின்னர்க் கூறுகிருேம்.'' என்று

பேசி நிறுத்துவதற்குமுன் நளன் அவர்களைத் தனித் தனியே வணங்கினான். இப்படி வணங்கியவன் பின், " இவர்களோ தேவர்கள் ; இவர்களுக்கு நம்மால் ஆகக் கூடியது என்ன இருக்கும்? மேலும் குறிப்பறிந்து ஈதலே சிறந்த கொடை. கேட்டபின் கொடுத்தல் கேட்டு இல்லை என்று சொல்வதற்குச் சமமாகும். இத் தேவர்களின் உள்ளத்தில் இன்னதுகேட்க இருக்கிறது என்பதை என்னால் அறிந்துகொள்ள இயலவில்லையே.

ஒளிமுகம் இழப்பவந்து உற்ற நாணம்மீதுர
கிளர்தர இல்லெனக் கிளக்கும் மூர்ச்சனை
தெளிதர முகத்தினில் தெளித்தற்கு அன்றுகொல்
நளிர்புனல் பொருளொடு நல்கு கின்றதே ?

அதாவது, " தம் முகப் பொலிவையும் கெடுத்துக் கொண்டு, நாணத்தினை யுடையவராய் என்னிடம் பொருள் இல்லை என்று கூறும் மயக்கத்தினைத் தெளிவு படுத்தற்கு அல்லவோ, பொருளினை உதவும்போது நீருடன் உதவும் மரபு ஏற்பட்டுள்ளது ? மேலும், தம்மை அடைந்து ஒன்றைக் கேட்கும் இரவலர், உறவு முறையினரைவிட இனியவர் ஆவர். இப்பிறவியில் அவ்விரவலர்கட்கு அருளுடன் ஈந்து இன்புறுவோ மானால், அவர்கள் மறு பிறப்பில் அவற்றை வழங்கி விடுவர். மேலும்,

உடைப்பெரும் பொருளை உலகில் ஊதியம்
கிடப்பதற்கு அளித்தலின் கிளர்நி றப்பினால்

**அடுத்துவந்து ஏற்குநர்க்கு ஆர்வம் மீதூரக்**
**கொடுக்கில் ஒன்றேபல கோடி ஆகுமால்**

அதாவது 'பெருஞ் செல்வத்தை இறைவர் கொடுத்திருப்பது, உலகில் புண்ணியமாகிய பேற்றைப் பெறுவதற்கே ஆகும். ஆகவே, வறுமையால் வாடிவந்து கெஞ்சிக் கேட்பவர்கட்கு அன்புடன் உதவினால், ஒன்று பலவாக மேலும் பெருகும்' என்பதாம்.

இவ்வாறெல்லாம் எண்ணி "தேவர்காள், என் தொல்குலம் செய்த தவம் காரணமாக உம்மைக் கண்டேன். நீர் என்னிடம் விரும்புவது யாதோ அறியேன். அதனைக் கூறினால் மறாமல் செய்கின்றனன்" என்று உறுதி கூறினன். உடனே இந்திரன் நளனை நோக்கி "ஐய, நளனே! நீ எங்கள் பொருட்டுத் தமயந்தியிடம் சென்று எங்கள் நால்வருள் ஒருவருக்கு மணமாலை சூட்டுமாறு தமயந்தியிடம் சொல்லவேண்டும்" என்றனன். இவ்வாறு கூறியதும், நளனுக்குத் தன் எண்ணத்தில் இடி விழுந்ததுபோல் இருந்தது. என்றாலும், தான் எது கூறினாலும் செய்து முடிப்பதாக வாக்குத் தந்தமையின் அதனை மறுத்தற்கு அஞ்சி அவ்வாறே செய்வதாகக் கூறினன்.

நளனுக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. அதாவது ஓர் ஆண்மகன் மாதர்கள் வாழும் அந்தப்புரம் சென்று எப்படி மீள்வது என்பதே அவ்வையம் ஆகும். ஆகவே,

நளன் இந்திரனை நோக்கி யான் எப்படிச் சென்று மீள்வது? என்று வினவ, உடனே இந்திரன் "நீ அந்தப் புரம் சென்று மீளும்வரை ஒருவர் கண்ணுக்கும் தோன்றமாட்டாய். ஆனால், நீ மட்டும் ஆண்டுளோர் யாவரையும் கண்ணுறுவாய். இத்தகைய மந்திர சக்தியினை உனக்கு நல்கியுள்ளேன்" என்று கூறினன்.

அம் மந்திர வித்தையுடன் நளன் தமயந்தி வாழ் இடம் நோக்கிப் புறப்பட்டனன். இவ்வாறு புறப்பட்டவன் தமயந்தியைச் சோலையிடத்தும் செய்குன்றுகளின் மீதும் காண இயலாதவனாகி, அவள் உறைவிடமாகிய கன்னி மாடத்தை அடைந்தனன். அங்கு அரம்பையர் சூழ இந்திராணி அமர்ந்திருப்பது போலத் தோழியர் பலர் சூழ இடையே தமயந்தி வீற்றிருத்தலை நளன் கண்டனன்.

தமயந்தியின் உள்ளம் நளனையே நாடி இருந்தது. என்பது உண்மையாதலாலும், தமயந்தியின் துயரை நீக்கத் தோழியர் அடிக்கடி தமயந்தியை நோக்கி, "அம்மணி வருந்தற்க. இதோ நளமகாராசர் வந்து விட்டனர்." என்று தினமும் கூறிவந்தனர். இவ்வாறு கூறுவதைத் தமயந்தி வளர்த்து வந்த கிளிகள் கேட்டு, அவையும் கூறத் தொடங்கின. இது நளனுக்குத் தெரியாதல்லவா? ஆகவே, நளன் தன் உருத்தோற்றுத நிலையில் தமயந்தியின் கன்னி மாடத்தில் வந்து தமயந்தியைக் கண்ணுற்று நின்ற தருணம், கிளிகள் தாம்

தினமும் பயின்ற பழக்கத்தால் "நளன் வந்தனன் நளன் வந்தனன்." என்று பேசத் தொடங்கியதைக் கேட்ட நளன், உடல் துணுக்குற்று இக் கிளி நம்மைக் கண்டுவிட்டதோ என்ற கருத்தில்.

**மண்டமர் கடந்தவேல் நளன்வந் தான்எனத்**
**தொண்டைவாய் மடந்தையர் நாளும் சொல்வன**
**பண்தரு மொழிக்கிளி பயின்று கூறலும்**
**கண்டதோ இங்குஎனக் காளை எண்ணினன்**

தேவர்கள் பெரிய ஐயம்கொண்டவர்கள். நளனைத் தமயந்திபால் தூதுவிட்டது போதாது என்று தாம் தாம் தனித்தனியே மாதர் நால்வரைத் தமயந்திபால் தூது விடுத்தனர். அவர்களும் தமயந்தியைக் கண்டு, அவள் அழகை யுண்டு, "இவள் அழகினைக் கண்டால் இந்திராணி முதலிய தேவமாதர்களும் வெட்கித் தலை குனிய வேண்டியதுதான். தமயந்தியின் அழகுக்கு முன் தேவமாதர் அழகு சூரியன் முன் சந்திரன் போன்றது," என்று வியந்து பேசினர். பின்னர்த்தாம் வந்த காரியத்தினை இனிது முடிக்க வேண்டுமென்று உளம்கொண்டு முதலில் இந்திரனால் ஏவப்பட்ட இந்திரன் தூதி தமயந்தியை நோக்கி, "தமயந்தியே, ஐந்தரு நிழலில் அரசு செய்யும் தேவர்களின் தலைவனான இந்திரன் தூதியான். இந்திரன் பெருமையைக் குறித்து இயம்ப வேண்டா. அவன் இந்திரலோகம் முழுமையும் தன்னதாகக்கொண்டு ஒரு கோல் ஓச்சுபவன். பகைவரை

வெல்லும் பலம் பொருந்தியவன். தேவர்கள் தம் இணையடி போற்றும் நிலையினைப் பெற்றவன். சிந்தாமணி காமதேனு கற்பக விருட்சம் ஆகியவற்றைத் தனக்கே உரிய தனி உரிமைபெற்றவன். உபேந்திரர் பொருட்டுக் கடலைக் கடைந்து திருமகளைப் பெற்று அவளை அவ் வுபேந்திரர்க்கு ஈந்த பெருமை நிறைந்தவன். உலகில் நூறு யாகங்களைச் செய்து இந்த இன்ப நிலையினைத் பெற்றவன். மேலும்,

மண்ணினில் சிறந்துவாழும்
  மன்பதைத் தொகுதி தன்னில்
எண்ணிடில் சிறந்தார் அன்றோ
  இயக்கர் ? அவ்வியக்கர் தம்மில்
விண்ணவர் சிறந்தார் அன்றோ ?
  விண்ணவர் தமையும் ஆளும்
அண்ணல்நின் ஏவல் கேட்பின்
  அதனினும் சிறந்தது உண்டோ

ஆகவே, அவனுக்கே நீ மணமாலை சூட்ட வேண்டும் என்று வேண்டி நின்றனள்.

தமயந்தி இந்திரன் தூதி இயம்பியவற்றைக் கேட்டு, "அந்தோ அவ்விந்திரன் என் உள்ளக் குறிப்பினை உணர்ந்திலனோ? உணராத காரணத்தால் அன்றோ உன்னை என்பால் அனுப்பினன்? என் உள்ளத்து நீங்காது உறைபவன் அந்நளனே ஆவன்.

ஆகவே நீ வந்த வழி நோக்கி இந்திரனை அடைக'' என்றாள், இவ்வாறு உரைப்பக் கேட்ட உருமறைந்து நின்ற நளன், தமயந்தி தன் மாட்டு வைத்துள்ள உண்மைக் காதலை எண்ணி எண்ணி உள்ளம் பூரித்தான். இந்திரன் விடுத்த தூதிக்குத் தமயந்தி விடுத்த விடைகளைக் கேட்டதும் இயமன் விடுத்த தூதியும், அக்கினி அனுப்பிய தூதியும் வருணன் போக்கிய தூதியும் தமயந்தியிடம் ஒன்றும் கூறாது திரும்பி விட்டனர்.

இனி, நளன் தான் வந்த காரியத்தினை இனிது முடிக்கும் பொருட்டு இனிக் கரந்துறையும் வடிவில் இருந்து பயன் இல்லை என்று உணர்ந்து, அக்கன்னிமார்களின் கட்புலன் முன்னால் மெய் வடிவுடன் தோற்றம் அளித்தனன்.

தமயந்தியின் அருகு இருந்த தோழியர் " ஐய, காவலையுடைய நகரைக் கடந்து இக் கன்னிமாடம் புகுந்த நீ யாவன்? உன் பெயர் யாது?'' என்று வினவினர். உடனே நளன், " நங்கைமீர் நமது தலைவி தமயந்தியின் சுயம்வரத்தைப் பற்றிக் கேள்வியுற்ற தேவர்களாம் இந்திரன், இயமன், அக்கினி, வருணன் ஆகிய நால்வரும் என்னைத் தூது விடுத்துள்ளார். ஆகவே யான் தேவர்கள் தூதன். அந் நான்கு தேவர்களும் உன் தலைவியினை மணாட்டியாகப் பெற முயன்று நிற்கின்றனர். அவர்களுள் ஒருவருக்கு அவள் மண

மாலை சூட்டவேண்டும். இதனைக் கூறவே அவர்களாலும் ஏவப்பட்டு இங்கு வந்துற்றனன்'' என்றனன்.

இவ்வாறு கூறக்கேட்ட தமயந்தியின் தோழியர், எங்கள் தலைவி வீமராசன் திருமகள் நிடத நாட்டு மன்னனையே தன் உயிரெனக் கருதியுள்ளாள். அவ்வாறு இருக்க இப்போது இவ்வாறு கூறி அவளது உயிர் துடிக்குமாறு செய்துவிட்டாய். நீ தேவர்கள் நால்வருள் இயமன் தூதுவன் என்பதற்குரிய கொடுமை உன்பால் இருப்பதை வெளிப்படுத்தி விட்டனை. எங்கள் தலைவி தமயந்தியின் உள்ளக் கிடக்கையினைக் கூறுகின்றோம் கேள்: கேட்டு உன்னைத் தூது விடுத்த தேவர்கட்குக் கூறுக. என்பதை

வையகம் ஒருகோல் ஓச்சி
வான்புகழ் நிடதம் காக்கும்
ஐயனை மணப்பது அன்றி
அரிமதர் நெடுங்கண் செவ்வாய்த்
தையல்வேறு ஒருவர் நாமம்
சாற்றிலும் ஆற்றாள் ஆகி
வெய்யசெந் தழலில் மூழ்கி
விளிவதற்கு ஐயம் இன்றே

என்று கூறிவிட்டனர்.

நளன் எப்படியும் தன் கடமையினை உளமாரவும ஒழுங்காகவும் செய்து முடிக்க வேண்டும் என்ற உள்ளத்தனாய், சேடியர்களைப் பார்த்து "தோழியர்

களே! உமது தலைவி நளனைத் தான் மணப்பாளோ? மற்றவரை மணக்க இச்சையாளோ? நளனை மணக்கும் பேறு பெறுளாயின், அக்கினிப் பிரவேசம் செய்து உயிர் விடுவாள் என்று கூறினீர். அப்படி உம் தலைவி அக்கினியில் மூழ்கினுல் அக்கினியோடு சேர்ந்த அபவாதம் நேரிடாதோ? அல்லது நீருள் மூழ்கி உயிர் விட்டால் வருணனோடு கலந்ததாக வார்த்தை எழாதோ? மற்றும் கூறுகின்றேன் கேளுங்கள்: திருமணத்தினை எவர் முடித்துக் கொண்டாலும் அக்கினியைச் சான்ருக வைத்து அல்லவா முடித்துக்கொள்ள வேண்டும்'' என்று கூறினன். நளன் மொழிகள் தமயந்தியின் இரு செவிகளில் நாராசம் காய்ச்சி ஊற்றியதுபோல இருந்தன.

இந் நிலையினைக் கண்ட நளன் இதற்குமேல் நாம் ஒன்றும் கூறுதல் கூடாது என்று தன் கடமையினை இனிது முடித்து விட்டதாக எண்ணி மீண்டும், தேவர்களை அடைந்து தமயந்தியைக் கண்டு கூறிய கூற்றுக்களையும் அவள் தோழியர் விடுத்த மறுமாற்றங்களையும் தமயந்தி உற்ற நிலையினையும் கூறினன். தேவர்களும் நளனது கடமை உணர்ச்சியையும் தூய உள்ளத்தினையும் பாராட்டிச் சென்றனர்.

# பயிற்சி வினாக்கள்

## 1. தூதர் பண்பு

1. வள்ளுவர் தூதுவர்க்கு எவ்வெப் பண்புகள் இருக்க வேண்டும் என்கிறார்?
2. பாரத வெண்பா தூதுவர்களைப் பற்றி என்ன கூறுகிறது?

## 2. ஔவையார்

1. அதிகமான் என்போன் யாவன்? அவனைப் பற்றி அறிந்து கொள்வன யாவை?
2. ஔவையாருக்கும் அதிகமானுக்கும் இருந்த அன்பு அளவு கடந்தது என்பது எப்படித் தெரிகிறது?
3. தொண்டைமான் இளந்திரையனைப் பற்றி வரைக.
4. தொண்டைமான் படைச் செருக்கை ஔவையார் எவ்வாறு அடக்கினர்?

## 3. தியாகர்

1. சுந்தரர், அனிந்திதை, கமலினி என் மண்ணுலகில் பிறக்க நேர்ந்தது?

2. சுந்தரர் அனிந்திதை, கமலினியாரை எப்போது மணக்க நேர்ந்தது ?
3. தியாகர் எதனால் பரவையாரிடம் தூது போயினர் ?

## 4. அங்கதன்

1. அங்கதன் யாவன் ? அவன் யாரால் யாரிடம் ஏன் தூதுவனாக அனுப்பப்பட்டான் ?
2. இராவணன் அங்கதனிடம் எம்முறையில் அன்புடனும் உறவுமுறையுடனும் பேசினன்?
3. இராவணனுக்கும் அங்கதனுக்கும் நடந்த சம்பாஷணை யாது ?

## 5. வீரவாகு

1. வீரவாகு என்பவர் யார் ? அவர் யாரிடம் ஏன் தூது போயினர் ?
2. சூரபதுமன் என்போன் யாவன் ? அவனது வாழ்வின் சிறப்புக்கள் யாவை ?
3. வீரவாகுதேவர் சூரபதுமனுக்கு உணர்த்தியவை யாவை ?
4. சூரன் தன் வீரம் தோன்றக் கூறியவை யாவை ?

## 6. உலூகன்

1. சூது என்பதைத் தலைப்பாகக்கொண்டு ஒரு கட்டுரை வரைக ?
2. உலூகமாமுனிவர் யார்பொருட்டு எங்கு ஏன் தூதுவராகச் சென்றனர் ?

8. உலூகர் துரியனிடம் எவ்வெவற்றை எடுத்துக் கூறினர்?

## 7. சஞ்சயன்

1. சஞ்சயமுனிவர் தருமனிடம் கூறியவை யாவை?
2. தருமர் சஞ்சயனிடம் சினத்துடன் எடுத்து மொழிந்தவை எவை?
3. வீமன் கோபத்துடன் என்ன கூறினன்?

## 8. கண்ணன்

1. தருமர் கண்ணனைத் துரியனிடம் தூது அனுப்புதற்குமுன் என்னென்ன கூறுமாறு அனுப்பினர்?
2. வீமன் வெகுண்டு உரைத்தவை எவை?
3. அர்ச்சுனன் அறைந்த மாற்றங்கள் எவை?
4. நகுல சகாதேவர் திரௌபதி நவின்றவை எவை?
5. கிருட்டினன் ஏன் விதுரர் வீட்டிற்குச் சென்றனர்? விதுரர் எப்படிக் கிருட்டினனை உபசரித்தனர்.
6. கிருட்டினன் தான் எதன் பொருட்டு விதுரர் இல்லத்தில் தங்கியதாகத் துரியனிடம் கூறினர்?
7. கிருட்டினன் துரியனிடம் கூறியவை எவை?
8. துரியன் தன் கருத்தாக எவ்வெவற்றை அறிவித்தனன்?
9. துரியனுக்குப் பீஷ்மர், துரோணர், விதுரர் அறிவித்தவை யாவை?

10. கிருட்டினன் குந்தி தேவியின் மூலமும் இந்திரன் மூலமும் எங்ஙனம் ஏற்பாடுகளைச் செய்தனன்.

## 9. நளன்

1. வீமசேனன் யாவன்? அவனது மகளைப் பற்றியும் வரைக
2. தமயந்தியை மணக்கப் புறப்பட்டவர் யாவர்? அவர்கள் தமயந்தியைப்பற்றி நினைந்தவற்றையும் கூறுக
3. நளன் விதர்ப்ப தேசத்தை நோக்கி ஏன் புறப்பட்டான்?
4. நளன் தேவர்களைக் கண்டதும் அவர்கள் கூறியவற்றைக் கேட்டதும் என்னென்ன எண்ணினான்?
5. நளன் தமயந்தியின் கன்னிமாடத்தில் கண்டவை கேட்டவை நிகழ்ந்தவை பற்றி வரைக.
6. தமயந்தி நளனிடம் அளவற்ற அன்பு கொண்டிருந்தாள் என்பது எப்படித் தெரிகிறது?

——— : ———